# சுபீட்சம்

சுபீட்சம் SUPEEDSAM EVERYTHING FOR PEOPLE

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

வியாழக்கிழமை 28.10.2021 | supeedsam.com | supeedsam@gmail.com







# சட்டத்தை மதிக்காதவர் சட்டம் சம்பந்தமான செயலணிக்கு தலைவரா?



## சாணக்கியன் கேள்வி!

(எருவில் துசி)

'ஒரு நாடு ஒரு சட்டம்'என்னும் ஜனாதிபதி செயலணி உருவாக்கப்பட்டதன் மூலம் தமிழ் மக்கள் பாரிய விளைவுக்கு முகம்கொடுக்க வேண்டிவரும் என நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

'ஒரே நாடு ஒரே சட்டம்' என்பதற்கான 13 பேர் கொண்ட ஜனாதிபதி செயலணி ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

இலங்கை அரசியலமைப்பின் 33ஆம் உறுப்புரையினால், ஜனாதிபதிக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைய 'ஒரே நாடு ஒரே சட்டம்' என்பதற்கான ஜனாதிபதி

02 ஆம் பக்கத்தில்...

## அமெரிக்காவுக்கு இலங்கை தரப்பிலிருந்து கோடுக்கப்பட்டுள்ள விளக்கம்

இலங்கையில் பயங்கரவாத தடைச்சட்டம் மற்றும் மனித உரிமைகள் மீது அதன் தாக்கம் குறித்து அமெரிக்க காங்கிரஸுக்கு விளக்கமளிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் குறித்து அமெரிக்க காங்கிரஸின் மனித உரிமைகள் ஆணைக்குழு அண்மையில் விவாதித்தது.

இதன்போது, இலங்கை தொடர்பில், குழுவின் அங்கத்தவர்களுக்கும்

02 ஆம் பக்கத்தில்...

## ஒரே நாடு ஒரே சட்டம் முஸ்லிம்களுக்கு ஆபத்து

(தர்மா)

ஒரே நாடு ஒரே சட்டம் என்ற செயலிணியின் கீழ் முஸ்லிம்களுக்கு ஆபத்து இருப்பதாக தமிழ் மக்கள் முற்போக்கு முன்னணியின் தலைவர் மனோ கணேசன் எச்சாித்துள்ளார்.

சர்ச்சைக்குரிய ஞானசார தேரரை தலைவராகக்கொண்டு அமைக்கப்பட்டுள்ள இந்த செயலணியில் தமிழர்கள் எவரும் அங்கம் வகிக்காமை குறித்து கருத்து எதனையும் தெரிவிக்காத அவர், இந்த செயலணியின் மீது நம்பிக்கையில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார்.

மாறாக இந்த விடயத்தில் கூட ஜனாதிபதி தமிழர்களை அலட்சியப்படுத்தியுள்ளதாக மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

# தேர்தல் முறைமை தோடர்பில் மனோ- மைத்திரி சந்திப்பு





முன்னாள் ஜனாதிபதியும் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் தலைவருமான மைத்திரிபால சிறிசேனவை தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் சந்தித்துள்ளார். தேர்தல் முறைமை தொடர்பில், ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் நிலைப்பாட்டை அறிவதற்காகவும், அதுபற்றி கலந்துரையாடவுமே மைத்திரிபாலவை தாம் சந்தித்ததாக மனோ கணேசன் ஊடகங்களுக்கு தெரிவித்தார்.

இச்சந்திப்பு மைத்திரிபால சிறிசேனவின் உத்தியோகபூர்வ இல்லத்தில் இடம் பெற்றுள்ளது.

இது பற்றி தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் எம்.பி மேலும் கூறியதாவது;

02 ஆம் பக்கத்தில்...

# ஒலுவில் மீன்பிடித் துறைமுகம் விரைவில் திறக்கப்படும் மீனவர்களின் பிரச்சினைகளுக்கு இந்த அரசாங்கத்தில் தீர்வு

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மீனவர்கள் மத்தியில் தெரிவிப்பு



சமுக பாதுகாப்பு சபையினால் அனைவருக்கும் ஓய்வூதியம் எனும் திட்டத்தை நடைமுறைப்படுத்தி கடந்த ஆண்டில் அகில இலங்கை ரீதியில் பிரதேச செயலக மட்டத்தில் முதலாம் இடத்தை பெற்ற களுவாஞ்சிக்குடி பிரதேச செயலாளர் திருமதி வி. சிவப்பிரியா அவர்களுக்கான சேவை நற்சான்றிதழ் நேற்று வட கிழக்கு இணைப்பாளர் திரு. பிரதீபன் முன்னிலையில் மட்டக்களப்பு அரசாங்க அதிபர் க.கருணாகரன் அவர்களினால் வழங்கிவைக்கப்பட்டபோது.



(ஏ. எல்.எம்.ஷினாஸ்)

அம்பாரை மாவட்ட மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் கேட்டறிந்து கொள்வதற்காக மீன்பிடித்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அம்பாறை மாவட்டத்திற்கு விஜயம் மேற்கொண்டார்.

இதன்போது கல்முனை மீன்பிடி மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்தில் இடம்பெற்ற கூட்டத்தில் அமைச்சர் கலந்து கொண்டு உரையாற்றினார். இங்கு உரையாற்றும் போதே ஒலுவில் மீன்பிடித்

02 ஆம் பக்கத்தில்...

# நாட்டை விட்டு வேளியேறும் அளவிற்கு பலவீனமான நபர் நான் அல்ல

## மைத்திரி தெரிவிப்பு



ஏப்ரல் 21 குண்டுத் தாக்குதலை முன்கூட்டியே அறிந்து நாட்டை விட்டு வெளியேறும் அளவிற்கு பலவீனமான நபர் நான் அல்ல, குண்டுத் தாக்குதல் சம்பவம் குறித்து நான் ஆரம்பத்தில் அறித்ததாக குறிப்பிடப்படுவது முற்றிலும் பொய்யானது என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

ஏப்ரல் குண்டுத்தாக்குதல்

02 ஆம் பக்கத்தில்...

## ஜனாதிபதி உட்பட முக்கிய அதிகாரிகளுக்கு எதிராக சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் முறைப்பாடு

ஆட்கடத்தல்கள், சட்டவிரோதமான தடுத்துவைப்புக்கள், சித்திரவதைகள் போன்றனவற்றைப் புரிந்தார்கள் என்ற குற்றச்சாட்டின் அடிப்படையில் இலங்கை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச உட்பட பல இராணுவ உயரதிகாரிகள் மீது சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

02 ஆம் பக்கத்தில்...






# நான் பேளத்த மதத்திற்கு எதிரானவனும் அல்ல மதவாதியும் அல்ல



(யாழ்.கீதன்)

நான் பெளத்த மதத்திற்கு எதிரானவனும் அல்ல மதவாதியும் அல்ல என யாழ்ப்பாண மாநகர முதல்வர் வி.மணிவண்ணன் தெரிவித்தார்

யாழ். மாநகர சபையின் மாதாந்த அமர்வு இடம்பெற்ற போது, நாக விகாரையின் விகாராதிபதி ஆரிய குளத்தின் புனரமைப்பு பணிகளை நிறுத்துமாறு கோரி மாநகர முதல்வருக்கு, அனுப்பியுள்ள

02 ஆம் பக்கத்தில்...

## கிறிஸ்தவ பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு பேராயர் பேசுவதற்கு அழைப்பு

உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை என அரசு மீது கடும் குற்றச்சாட்டுகளை முன்வைத்து வரும் கொழும்பு பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை,அரசுக்கு எதிரான நடவடிக்கையில்

02 ஆம் பக்கத்தில்...






## ஈஸ்டர் தாக்குதல் விசாரணை மூடி மறைக்கப்படுவதாக குற்றம் சுமத்த முடியாது



உயிர்த்த ஞாயிறு தற்கொலைத் தாக்குதல் சம்பவம் தொடர்பிலான விசாரணைகள் மூடி மறைக்கப்படுவதாக யார் மீதும் குற்றம் சுமத்தப்பட முடியாது என பொதுப் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு கருத்து

02 ஆம் பக்கத்தில்...




# கணினி கல்வியூடான இணையவழி கற்றலுக்கான நவீனமயப்படுத்தப்பட்ட வகுப்பறை

(ரக்ஸனா)

வலுவிழந்து காணப்படும் சமூகத்தினை கருத்தில் கொண்டு மாற்றத்திற்கான வலுவூட்டல் என்னும் தொனிப்பொருளில் வெளிநாடு புலம்பெயர் உறவுகள் மற்றும் சர்வதேச நிறுவனங்களின் உதவியினூடாக பல்வேறு மனிதாபிமான செயற்திட்டங்களை மட்டக்களப்பு மற்றும் முல்லைதீவு மாவட்டங்களில் விவேகானந்தசமுதாய அறக்கட்டளை ஆற்றிவருவது குறிப்பிடத்தக்கது.

அதன் ஒரு செயற்பாடாக கணினி கல்வியூடான இணையவழி கற்றலுக்கான நவீனமயப்படுத்தப்பட்ட வகுப்பறை நிலையத்தின் திறப்பு நிகழ்வு செவ்வாய்கிழமை (26) மாலை விவேகானந்த சமுதாய அறக்கட்டளையின்



நிறைவேற்று பணிப்பாளர் க.பிரதீஸ்வரன் தலைமையில் மயிலம்பாவெளியில் அமைந்துள்ள வாழும் கலை நம்பிக்கை கிராம சிறுமிகள் காப்பகத்தில் நடைபெற்றது.

இந் நிகழ்விற்க ஏறாவூர் பற்று பிரதேச செயலாளர் எஸ்.ராஜ்பாபு அவர்கள் பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்தார் அத்தோடு மட்.மயிலம்பாவெளிணீ ஸ்ரீ விக்னேஸ்வரா வித்தியாலய அதிபர் பாஸ்கரன் மற்றும் சிறுமியர் காப்பக முகாமையாளர், உறுப்பினர்கள் ஆகியோர் இந்நிகழ்வில் கலந்து சிறப்பித்தனர்.

இந்த வகுப்பறையினை அமைப்பதற்காக மனிதநேய நம்பிக்கைநிதியத்தின்நன்கொடையாளர்களான ஐக்கிய அமெரிக்காவை சேர்ந்த திருமாவளவன் மற்றும் கரிகால் வளவன் ஆகியோரின் அமரத்துவமடைந்த பெற்றோரான செல்லையாசச்சிதானந்தசிவம் மற்றும் திருமதி.தயாநிதி சச்சிதானந்தசிவம் ஆகியோரின் நினைவாக இதற்கான நிதியை வழங்கியிருந்தனர்.

பின்தங்கிய கிராமங்களில் வாழ்கின்ற மாணவ மாணவிகள் இந்த இணைய வழி கற்றலில் சந்தர்ப்பம் கிடைக்காமல் பின்தங்கி செல்கின்றனர். இவ்வாறான செயற்பாடுகளால் இந்த சிறுமி காப்பக மாணவர்கள் மிகப்பெரும் பயனை பெற்றுள்ளனர். இதற்கு உதவி செய்த மனிதநேய நம்பிக்கை நிதியத்தின் நன்கொடையாளர்களிற்கும் தனது நன்றியை தெரிவித்துக் கொள்வதாக இதன்போது கலந்து கொண்ட ஏறாவூர் பற்று பிரதேச செயலாளர் எஸ்.ராஜ்பாபு தெரிவித்தார்.

# அமெரிக்காவுக்கு இலங்கை தரப்பிலிருந்து கொடுக்கப்பட்டுள்ள

பங்கேற்பாளர்களுக்கும் விளக்கமளிப்பதற்காக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னாள் உறுப்பினர் அம்பிகா சத்குணநாதன் (Ambika Satgunanathan) அழைக்கப்பட்டுள்ளார்.

இந்தநிலையில் ஆணைக்குழுவில் விளக்கமளித்த அவர், வரலாற்று ரீதியாக தமிழர்களுக்கு எதிராகவும், 2019 ஏப்ரலில் உயிர்த்த ஞாயிறு தாக்குதலைத் தொடர்ந்து முஸ்லிம்களுக்கு எதிராகவும் பயங்கரவாத தடைச்சட்டம் பயன்படுத்தப்பட்டுள்ளது என்று கூறியுள்ளார்.

இந்தச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட ஒருவரை, நீதிபதி ஒருவர் முன்னிலையில் முன்னிலைப்படுத்தப்படாமல், தன்னிச்சையாக கைது செய்து 18 மாதங்கள் வரை காவலில் வைக்கமுடியும் என்று சுட்டிக்காட்டியுள்ளார்.

தாம், தன்னிச்சை என்ற வார்த்தையைப் பயன்படுத்துவதற்கான காரணத்தை விளக்கிய அவர், விசாரணையின் போது கண்டுபிடிக்கப்பட்ட ஆதாரங்கள் அல்லது நியாயமான சந்தேகத்தின் அடிப்படையில் ஒருவர் கைது செய்யப்படுவதில்லை.

மாறாக, பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் குற்றம் சுமத்தப்பட்டுள்ள ஒருவரின் பணப் பரிமாற்றத்தைச் வெஸ்டர்ன் யூனியனில் செயலாக்கியவர் மற்றும் குற்றம் சாட்டப்பட்டவருக்கு உந்துருளியை விற்பனை செய்தவர் போன்றோர் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்படுகின்றனர் என்று அம்பிகா சத்குணநாதன் சுட்டிக்காட்டியுள்ளார்.

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலைத் தொடர்ந்து, அரபு மொழியில் புத்தகங்கள் அல்லது அல்லாஹ்வைப் புகழ்ந்து பேசும் அரேபியப் பாடல்கள் வைத்திருந்தவர்கள் கூட கைது செய்யப்பட்டனர் என்று அவர் கூறியுள்ளார்.

PTA என்ற பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ்`கைது செய்யப்படும் போது உரிய நடைமுறைகள் எப்போதும் மீறப்படுகின்றன.

விசாரணையின் போது ஒரு உதவிக் காவல் கண்காணிப்பாளர் பதவிக்கு மேல் உள்ள காவல்துறை அதிகாரியிடம் அளிக்கப்பட்ட வாக்கு மூலத்தை ஆதாரமாக ஒப்புக்கொள்ளவும் இந்தச்சட்டம் அனுமதிக்கிறது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதன் விளைவாக, வாக்கு மூலம் பெறுவதற்காக அழைக்கப்படுவோர் சித்திரவதைக்கு உள்ளாகின்றனர்.

இதேவேளை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் சிறைச்சாலைகள் பற்றிய ஆய்வின் படி, பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள 84% ஆண்கள், கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து தாங்கள் சித்திரவதைக்கு ஆளானதாகக் கூறியதாகவும், சித்திரவதைக்கு ஆளானவர்களில் 907 பேர் தாங்கள் கையொப்பமிடப்பட்டதாகக் கூறியதாகவும் சத்குணநாதன் அமரிக்க காங்கிரஸ் அமர்வின் போது தெரிவித்துள்ளார்.

சித்திரவதைக்குப் பிறகு ஒப்புதல் வாக்குமூலம் வழங்கிய 95% ஆண்கள், தாங்கள் கையொப்பமிட்ட ஆவணம் தங்களுக்குத் தெரியாத சிங்கள மொழியில் எழுதப்பட்டிருந்ததாகவும் அது தொடர்பில் தமக்கு விளக்கப்படவில்லை என்றும் தொ`வித்திருந்தனர்.

ககூஅ என்ற பயங்கரவாதச்சட்டம், பாதுகாப்பு அமைச்சருக்கு 18 மாதங்கள் வரை கட்டுப்பாடு உத்தரவுகளை வழங்க அனுமதிக்கிறது.

மக்கள் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதையோ, நிகழ்வுகளில் பேசுவதையோ அல்லது ஒரு நிறுவனத்திற்கு ஆலோசனை வழங்குவதையோ தடுக்க கட்டுப்பாடு ஆணைகள் பயன்படுத்தப்படலாம்.

இத்தகைய உத்தரவுகள், வெளிப்படைத்தன்மை அல்லது பொறுப்புக்கூறல் இல்லாமல் தன்னிச்சையாக அமைச்சரால் அனுமதிக்கின்றன.

ஒருவர் நீதிமன்றக் காவலுக்கு அனுப்பப்பட்ட பின்னரும் கூட, ஒருவரின் தடுப்புக்காவல் இடத்தைத் தீர்மானிக்க பாதுகாப்பு அமைச்சின் செயலாளரை இந்தச்சட்டம் அனுமதிக்கிறது.

இதற்கிடையில் பயங்கரவாதத்திற்கு நிதியுதவி செய்யப்படுவதை தடுக்கும் வகையில், குறிப்பாக தமிழ் பெரும்பான்மையான வடக்கு மற்றும் கிழக்கில் கருத்து வேறுபாடு, ஊடக சுதந்திரம் மற்றும் சிவில் சமூக செயற்பாடுகளை அச்சுறுத்துவதற்கும் மற்றும் ஒடுக்குவதற்கும் பயங்கரவாத தடைச்சட்டம் ஒரு ஆயுதமாக பயன்படுத்தப்படுவதாக சத்குணநாதன், அமெரிக்க காங்கிரஸின் மனித உா`மைகள் குழுவிடம் தெரிவித்துள்ளார்.

# சட்டத்தை மதிக்காதவர் சட்டம் சம்பந்தமான செயலணிக்கு தலைவரா?

செயலணி பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தலைமையில் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில் இன்றைய தினம் காணொளி ஒன்றினை வெளியிட்டுள்ள இரா.சாணக்கியன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது கருத்து வெளியிட்டுள்ள அவர், நேற்று காலை ஜனாதிபதியினால் புதிய செயலணியொன்று உருவாக்கப்பட்டுள்ளதாக அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. அந்த செயலணிக்கு கலகொடே அத்தே ஞானசார தேரர் தலைமைவகிப்பதாக சொல்லப்பட்டுள்ளது.

தற்போது இந்த நாட்டில் இருக்கும் ஒரு நாடு ஒரு சட்டத்தினை அமுல்படுத்துவதற்காக அந்த செயலணி தொடர்பில் வெளியான செய்தியில் பார்க்ககூடியதாகவுள்ளது. இந்த நாட்டில் உள்ள சட்டத்தினை அமுல்படுத்தினாலேயே போதுமானது. இருக்கின்ற சட்டத்தினை அனைவருக்கும் சமமாக நடைமுறைப்படுத்துங்கள் என்பதே இந்த நிலைப்பாடாகும்.

ஜனாதிபதிக்கு வேண்டப்பட்டவர்கள், தமிழ்முஸ்லிம் மக்களுக்கு எதிராக செயற்பட்டவர்களுக்கு ஒரு சட்டமும், வடகிழக்கு தமிழ் மக்களுக்கு ஒரு சட்டமும் என்ற நிலைப்பாடில்லாமல் ஒரு சட்டத்தினை அமுல்படுத்துங்கள் என்றே நாங்கள் கூறியிருந்தோம்.

அதனைவிடுத்து புதிதாக ஒரு நாடு ஒரு சட்டம் என்ற செயணியை உருவாக்குவதன் மூலம் இலங்கை நாட்டின் சட்டத்தினை மதிக்காத ஒருவரை ஜனாதிபதியாக கொண்டுவந்துள்ளனர். இந்த சட்டத்திற்கு எதிரான எங்களது கண்டனத்தினை தெரிவித்துக்கொள்கின்றோம்.

எதிர்காலத்தில் இதன் ஊடாக தமிழ் பேசும் மக்கள் பாரிய விளைவுகளுக்கு முகம்கொடுக்கும் நிலையுருவாகும்.

இன்று மக்கள் பல்வேறு பிரச்சினைகளுக்காக போராடிவருகின்ற நிலை காணப்படுகின்றது. இன்னும் இரண்டு வருடத்தில் இந்த நாட்டில் பசியினால் மக்கள் உயிரிழக்கும் நிலையேற்படும்.

இவ்வாறான நிலையில் இலங்கையில் மக்களை திசைதிருப்புவதற்காக போலியான விடயங்களை செய்யாமல்,நாட்டு மக்களின் நலனுக்காக செயற்படவேண்டும் என்ற கோரிக்கையினை முன்வைக்கின்றேன். எனக் குறிப்பிட்டுள்ளார்.




# ஈஸ்டர் தாக்குதல் விசாரணை மூடி மறைக்கப்படுவதாக

வெளியிட்ட போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்,

பொலிஸாரினால் செய்யக்கூடிய நடவடிக்கைகள் பூர்த்தியாகியுள்ளன. அனைத்து விசாரணைகளும் பூர்த்தி செய்து சட்ட மா அதிபரிடம் அறிக்கை ஒப்படைக்கப்பட்டுள்ளது.

ஐந்து மேல் நீதிமன்றங்களில் 9 வழக்குகள் விசாரணை செய்யப்பட்டு வருகின்றன. இதற்கான திட்டத்தை வகுத்த 24 தீவிரவாதிகளுக்கு எதிராக ஏற்கனவே குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேல் நீதிமன்ற நீதிபதிகள் மூவர் அடங்கிய குழுவொன்று நாள் தோறும் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றது. பொலிஸ் திணைக்களத்திற்கு பொறுப்பான அமைச்சர் என்ற ரீதியில் அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு விட்டன, இனி சட்ட மா அதிபரின் கைகளிலேயே தங்கியுள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# கிறிஸ்தவ பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு பேராயர்

நேரடியாக களம் இறங்கியுள்ளதாக தென்னிலங்கை ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இதன் முக்கிய நகர்வாக நாடாளுமன்றத்தில் உள்ள அனைத்து கிறிஸ்தவ உறுப்பினர்களையும் சந்திப்பதற்கான அழைப்பை பேராயர் விடுத்துள்ளார். இந்தச் சந்திப்பு எதிர்வரும் வெள்ளிக்கிழமை பேராயர் இல்லத்தில் நடைபெறும் என்று தெரிவிக்கப்படுகிறது.

ஈஸ்டர் தாக்குதல் விசாரணை மற்றும் பல விடயங்கள் இதன் போது பேசப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

பேராயரின் இந்த அழைப்பு கொழும்பு அரசியலில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# நான் பௌத்த மதத்திற்கு எதிரானவனும் அல்ல மதவாதியும்

கடிதம் தொடர்பில் சபையில் முதல்வர் தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நான் ஒரு மதவாதி அல்ல , அத்தோடு பௌத்த மதத்துக்கு எதிரானவும்அல்ல. நான் இந்து மதத்தைச் சேர்ந்தவன்.அதனால் ஏனைய மதங்களுக்கு எதிரானவன் அல்ல. என்னை மதவாதி என சித்தரிக்கும் வகையில் நாகவிகாரை விகாராதிபதியினால் யாழ் மாநகர முதல்வர் என எந்தவித மரியாதையும் வழங்காது கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. எனவே என்னை தவறான புரிதலுடன் இந்த கடிதத்தை அனுப்பியுள்ளார்கள் என விகாராதிபதிக்கு தெரிவிக்க விரும்புகிறேன். அப்பகுதி புனித பிரதேசமாக இருக்க வேண்டும் நான் ஒரு இந்து மதத்தைச் சேர்ந்த ஒரு தமிழன் அந்த வகையில் நாம் எதிர்காலத்தில் அடையகூடிய தமிழ் தேசியத்தை ஒரு மதச்சார்பற்ற இடமாக அனைத்து மத மக்களும் தாம் விரும்பிய மதத்தை வழிபடுகின்ற அல்லது தங்களுடைய மத அனுஷ்டானங்களில் ஈடுபடுகின்ற இடமாக தமிழ்த் தேசம் கட்டி அமைக்கப்படும் என்று தெரிவித்தார்.

அதேவேளை,யாழ்.மாநகர சபையின் சொத்தாக இருக்கும் ஆரிய குளத்தில் எந்த விதமான மத அடையாளங்களையும் அமைக்க முடியாது என யாழ். மாநகர சபையில் நேற்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

# ஜனாதிபதி உட்பட முக்கிய அதிகாரிகளுக்கு எதிராக

Global Rights Compliance LLP என்ற சட்டவல்லுனர் அமைப்பு இந்த வழக்கைத் தாக்கல் செய்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கை அரசாங்கத்தின் இந்த முக்கியஸ்தர்களை புலனாய்வு செய்து, உரிய நேரத்தில் கைது செய்து, குற்றவிசாரணை செய்ய வேண்டும் என்றும் அந்த மனுவில் கோரப்பட்டுள்ளது.

இலங்கையின் தற்போதைய ஜனாதிபதியும் முன்னாள் பாதுகாப்புச் செயலருமான கோட்டாபய ராஜபக்ச, இலங்கையின் தற்போதைய பாதுகாப்புச் செயலாளரும் இலங்கை இராணுவத்தின் முன்னாள் இராணுவ அதிகாரியுமான கமல் குணரட்ண, இலங்கையின் முன்னாள் இராணுவத் தளபதியும் இலங்கை இராணுவத்தின் பாதுகாப்புப் படைகளின் தலைமை அதிகாரியுமான ஜகத் ஜெயசூரிய, இலங்கை பொலிஸின் குற்ற விசாரணைப் பிரிவு மற்றும் பயங்காரவாத விசாரணைப் பிரிவுகளின் பிரதிப் பொலிஸ்மா அதிபர் சிசிர மெண்டிஸ் உட்பட 2002 ம் ஆண்டு முதல் இலங்கை பொலிஸின் பொலிஸ்மா அதிபர்களாகப் பதவி வகித்து வந்தவர்கள் மற்றும் 2002ம் ஆண்டு முதல் இலங்கை பொலிஸின் விசேட அதிரடிப்படைப்பிரிவின் கட்டளை அதிகாரிகளாக செயற்பட்டவர்கள் போன்றோர்களின் பெயர்களும் அந்த மனுவில் இடம்பெற்றுள்ளன.

இலங்கையிலும், பிரித்தானியாவிலும் வாழும் ஏராளமான பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட ஆட்கடத்தல்கள், சட்டவிரோதமான தடுத்துவைப்புக்கள், சித்திரவதைகள் ஆகிய செயற்பாடுகள் ஊடாக வலுக்கட்டாயமாக நாடுகடத்தல், தாயகத்திற்கு திரும்பிச் செல்வதற்கான உரிமையினை மறுதலித்தல், துன்புறுத்துதல் ஆகிய மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்களுக்கு மேலே குறிப்பிடப்பட்டுள்ள நபர்கள் பொறுப்பாக இருந்தார்கள் என்ற குற்றச்சாட்டின் அடிப்படையிலேயே அந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

# நாட்டை விட்டு வெளியேறும் அளவிற்கு பலவீனமான நபர்

சம்பவத்தை அரசாங்கம் என்ற ரீதியில் பொறுப்பேற்க தயார், ஆனால்,தனிப்பட்ட முறையில் பொறுப்பேற்க தயாரில்லை என மைத்திரிபால சிறிசேன தனியார் ஊடகத்திற்கு வழங்கிய நேர்காணலில் தெரிவித்துள்ளார்.

ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதலை நான் முன்கூட்டியதாக அறிந்ததாகவும், குண்டுத்தாக்குதலை தடுக்காமல் நாட்டை விட்டு வெளியேறியதாகவும் குறிப்பிடும் கருத்துக்கள் முற்றிலும் தவறானது.

எனது அரசியல் வரலாற்றில் ஏப்ரல் 21 குண்டுத் தாக்குதல் சம்பவத்தை மறக்க முடியாத ஒரு வேதனைக்குரிய சம்பவமாகவே கருதுகிறேன்.

ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் சம்பவத்தினால் பெரும் நெருக்கடிகளையும், தனிப்பட்ட மன உளைச்சலையும் இதுவரையில் எதிர்கொண்டுள்ளேன்.

குண்டுத்தாக்குதலை அறிந்து நாட்டை விட்டு வெளியேறும் அளவிற்கு நான் ஒன்றும் பலவீனமான நபர் அல்ல.2019 ஏப்ரல் 20 மற்றும் 21 ஆம் திகதிகளில் சிங்கப்பூரில் இருந்தேன். ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் இடம்பெற்றதை தொடர்ந்து அரசாங்கத்தின் உயர்மட்ட தரப்பினரும், பாதுகாப்பு தரப்பினரும் எனக்கு அறிவிக்கவில்லை.

முகப் புத்தகம் ஊடாகவே அறிந்துக்கொண்டேன். அதிகாரிகள் தங்களின் பொறுப்பை முறையாக செயற்படுத்தவில்லை என்று மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

# ஒலுவில் மீன்பிடித் துறைமுகம் விரைவில் திறக்கப்படும்

துறைமுகத்தை அங்கு வாழும் மக்களுக்கு பிரச்சினை இல்லாத வகையில் விரைவில் மீள திறப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று தெரிவித்தார். தொடர்ந்து இங்கு உரையாற்றுகையில்,

அம்பாரை மாவட்ட மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் இங்குள்ள மீனவ அமைப்புகள், சங்கங்கள், மீனவர்கள் என பலரும் கருத்துக்களை தெரிவித்து இருக்கின்றீர்கள். உங்களுடைய பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வு வழங்கப்படும். வடக்கு கிழக்கில் இருக்கின்ற மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும் என்பதற்காக மீன்பிடித்துறை அமைச்சு என்னிடம் ஒப்படைக்கப்பட்டது. எனவே மீனவர்களின் பிரச்சினைகளை தீர்க்க நான் நடவடிக்கை எடுப்பேன்.

ஒலுவில் பிரதேசத்தை பொறுத்தளவில் மீன்பிடி துறைமுகம் வேண்டும் எனக்கூறினாலும் மீன்பிடித் துறைமுகம் அமைக்கப்படுவதால் கடல் அரிப்பு ஏற்படுகிறது என அங்கிருக்கின்ற மக்கள் அச்சம் தெரிவிக்கின்றனர்.எனவே இருதரப்பினருக்கும் பாதிப்பில்லாத வகையில் அவர்களுக்கான மாற்று நடவடிக்கை விரைவில் ஆரம்பிக்கப்பட வேண்டும். அங்கு வாசிப்பவர்களுக்கு பிரச்சினைகள் இல்லாத வகையில் விரைவில் மீன்பிடித் துறைமுகத்தை திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

அதேபோன்று மீனவர்களால் முன்வைக்கப்படுகின்ற மீன்பிடிக் கொள்ளை நவீன இயந்திர படகுகளினால் ஏற்படும் பிரச்சினைகள், தொழில்நுட்ப ரீதியாக மீனவர்கள் எதிர்நோக்கும் சவால்கள், மீன்பிடித் துறை சம்பந்தமான பயிற்சிக் கூடம் மற்றும் இதர மீன்பிடி தொடர்பாக இங்கு முன் வைக்கப்பட்ட பிரச்சினைகளுக்கு குறுகிய காலத்திற்குள் தீர்வை பெற்றுத் தருவேன். கூட்டத்தில் இருந்து தப்புவதற்காக அல்லது ஊடகங்களுக்கு செல்வதற்காக நான் இதைச் சொல்லவில்லை நீங்கள் நம்பலாம். என்று அமைச்சர் இங்கு தெரிவித்தார்.

இந்த கூட்டத்தில் திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம் ஹரிஸ், கடற்றொழில் நீரியல் வளங்கள் திணைக்களத்தின் கல்முனை மாவட்ட காரியாலயத்தின் உதவி பணிப்பாளர் நடராஜா சிறிரஜ்ஜன், திணைக்களத்தின் பயிற்சி மற்றும் விசாரணை பிரிவு பணிப்பாளர் என்.ஜி.என். ஜெயக்கொடி, கல்முனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கே.எச்.சுஜித் பிரியந்த, கடற்படை அதிகாரிகள், கரையோரம் பேணல் திணைக்களத்தின் அதிகாரிகள், பொறியியலாளர்கள் உள்ளிட்ட அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

# தேர்தல் முறைமை தொடர்பில் மனோ- மைத்திரி சந்திப்பு

தேர்தல் நடக்கப் போகிறதோ. இல்லையோ. ஆனால், தேர்தல் முறைமையை பூரணமாக மாற்றி விகிதாசார முறைமையை ஒழித்து, கலப்பு முறைமையை கொண்டு வந்து, சிறிய கட்சிகளின் பிரதிநித்துவங்களுக்கு பாரிய பாதிப்பை ஏற்படுத்தி, இந்நாட்டில் இரண்டு கட்சி ஆட்சியை நிலை பெற செய்ய அரசாங்கம் கங்கணம் கட்டி செயற்படுகிறது.

இதற்கு உறுதுணையாக ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியும் கலப்பு முறைமையை ஆதரிக்கிறது என தெரிவுக்குழு தலைவர் அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவுக் குழுவில் அறிவித்துள்ளார்.

இது ஏற்கனவே ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி தலைவர் மைத்திரிபால சிறிசேன மற்றும் அக்கட்சியின் பொது செயலாளர் தயாசிறி ஜயசேகர ஆகியோர் என்னிடம் நேரடியாக அறிவித்திருந்த நிலைப்பாட்டுக்கு முரணாக உள்ளது என நான் இச்சந்திப்பின் போது முன்னாள் ஜனாதிபதிக்கு எடுத்து கூறினேன்.ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியே இன்று நாட்டில் மூன்றாவது பெரிய கட்சியாக இருக்கிறது. இந்நிலையில் உத்தேச கலப்பு தேர்தல் முறை தமிழ், முஸ்லிம் கட்சிகளை மட்டுமல்ல, ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி, ஜே.வி.பி ஆகிய கட்சிகளையும் அழித்து விடும் என்று மைத்திரிபாலவிடம் நான் எடுத்து கூறினேன்.

தற்போது தமிழ், முஸ்லிம் கட்சிகளுடன் இணைந்து ஜே.வி.பி, ஐக்கிய மக்கள் சக்தி ஆகிய கட்சிகளும் விகிதாசார முறைமையையே ஆதரிக்கின்றன. கலப்பு முறைமையை எதிர்க்கின்றன.

கலந்துரையாடலின் போது, எமது நிலைப்பாட்டை ஏற்றுக் கொண்ட முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, தெரிவுக்குழு தலைவர் அமைச்சர் தினேஷ் குணவர்தன கூறுவது பிழை.அங்கே எமது கட்சியின் நிலைப்பாடு சரிவர கூறப்படவில்லை.விரைவில் நமது கட்சியின் அதிகாரபூர்வ குழு அங்கே வந்து எமது நிலைப்பாட்டை அறிவிப்போம் என கூறினார் என்று மனோ கணேசன் தெரிவித்தார்.








நாட்டில் உள்ள 19 தேசிய ஆசிரியர் கல்வியல் கல்லூரி சங்கத்தினரால் முன்வைக்கப்பட்ட diploma in education தர சான்றுதழை பட்டதாரியாக degree of education மாற்றி தரும் படியும் அதற்கு அமைச்சரவை அங்கிகாரம் கொடுத்தும் இதுவரை செயற்படுத்தவில்லை குறித்த கோரிக்கையை நிறைவேற்றி தருமாறு கோரி ஆர்பாட்டம் நேற்று நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தின்போது மட்டக்களப்பு மாவட்ட ஆசிரியர் சங்கத்திற்கு சார்பாக செங்கலடி பிரதேச சபை உறுப்பினர் சுரேந்தர் கலந்து கொண்டார்.

# காரைதீவு ப.நோ.கூ.சங்கத்தில் பழையவிலையில் அங்கர் பால்மா! 1000 ரூபா உலருணவுப் போதி; மக்கள் முண்டியடிப்பு

**(வி.ரி.சகாதேவராஜா)**



கிழக்குமாகாண கூட்டுறவு அபிவிருத்தித்திணைக்களத்தின் ஏற்பாட்டில், காரைதீவு ப.நோ.கூ.சங்கத்தில் பழைய விலையில் அங்கர் பால்மா விநியோகம் இடம்பெற்றுவருகிறது.

நாட்டில் பால்மா தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளநிலையில் கூட்டுறவு இராஜாங்கஅமைச்சர் லசந்த அழகியவன்ன மேற்கொண்ட முயற்சியின் பலனாக, மத்தியஅரசு கூட்டுறவுஅபிவிருத்தித்திணைக்களத்துடன் இணைந்து மக்களுக்கு பழையவிலையில் பால்மாவை விநியோகிக்கும் திட்டத்தை அமுல்படுத்தியுள்ளது.

அந்தவகையில்,கிழக்கு மாகாணகூட்டுறவுஅபிவிருத்தி ஆணையாளர் எ.எல்.எம்.அஸ்மி கிழக்குமாகாண மக்களுக்கென 2கோடி ருபாவுக்கு அங்கர் பால்மா கொள்வனவுசெய்யப்பட்டு சகல கூட்டுறவுச்சங்கங்களினூடாகவும் விநியோகிக்க துரித நடவடிக்கை எடுத்திருந்தார்.

அதன்படி 400கிறாம் அங்கர் பால்மா 380ருபாவுக்கு விநியோகிக்கப்பட்டுவருகிறது.வெளியில் தற்போதையவிலை 480ருபா என்பது குறிப்பிடத்தக்கது.

காரைதீவு ப.நேர்.கூ.சங்கத்திற்கு 1340 பக்கட் 400கிறாம் அங்கர் பால்மாவும், 53பக்கட் 1கிலோ அங்கர் பால்மா பக்கட்டும் கொள்வனவு செய்ததாக ப.நோ.கூ.சங்கத்தலைவர் வை.கோபிகாந் தெரிவித்தார்.

காரைதீவு ப.நோ.கூ.சங்கத்தலைவரும் பட்டதாரி ஆசிரியருமான வை.கோபிகாந் சமகாலசூழ்நிலையை கருத்திற்கொண்டு, 3கிலோசீனி, 400கிறாம் அங்கர் பால்மா, 200கிறாம் தேயிலை, 1 உப்பு பக்கட் அடங்கிய 1000ருபா பெறுமதியான உலருணவுப்பொதியை மக்களுக்கு வழங்க நடவடிக்கை எடுத்தார்.

.இது மக்கள் மத்தியில் பலத்த வரவேற்பைப்பெற்றுள்ளது.இந்த உலருணவுப்பொதியைப் பெற மக்கள் முண்டியடித்ததைக்காணக்கூடியதாயிருந்தது. இரண்டுதினங்களில் 1340 பொதிகள் விநியோகிக்கப்பட்டன.

இதேவேளை, அங்கு சீனி 1கிலோ 125ருபாவுக்கும் அங்கு விற்பனைசெய்யப்படுகிறது. இந்நடைமுறை கடந்த 4மாதகாலமாக நடைபெற்றுவருகிறது. இதுவரை 150 சாக்கு சீனி விற்கப்பட்டதாக ப.நோ.கூ.சங்க பொதுமுகாமையாளர் லியோராஜ் ரமேஸ்குமார் தெரிவித்தார்.

.இத்தகைய சலுகைவிலை மானியத்தை ப.நோ.கூ.சங்கங்களினூடாக தொடர்ந்து மேலும் பல அத்தியாவசிய பொருட்களுடன் விநியோகிக்க அமைச்சர் லசந்தஅழகியவன்ன நடவடிக்கை எடுக்கவேண்டுமென பொதுமக்கள் கேட்டுக்கொண்டுள்ளனர்.

# ஆழுமையற்ற பிரதேச சபை செயலாளரை இடமாற்ற கோரி ஆர்ப்பாட்டம்



**( வாஸ் கூஞ்ஞ)**

மன்னார் மாந்தை மேற்கு பிரதேச சபை செயளாலரை இடம் மாற்றக்கோரி மாந்தை மேற்கு பிரதேச சபை உறுப்பினர்களால் புதன்கிழமை காலை 11 மணியலவில் மாந்தை மேற்கு பிரதேச சபைக்கு முன்பாக அடையாள கவனயீர்ப்பு போராட்டம் இடம் பெற்றது.

மன்னார் மாந்தை மேற்கு பிரதேச சபையின் செயளாலரின் ஆழுமையற்ற செயற்பாட்டாலும் வினைத்திரன் அற்ற முடிவுகளாலும் அபிவிருத்திகள் மற்றும் வேலை திட்டங்கள் அனைத்தும் பின் நோக்கி காணப்படுவதாகவும் எழுத்து மூல செயற்பாடுகள் மட்டுமே இடம் பெறுவதாகவும் பௌதீக செயற்பாடுகள் எவையும் இவரால் இடம் பெறுவதில்லை என கோரியே இவ் கவனயீர்ப்பு போராட்டதை முன்னெடுத்தனர்.

மன்னார் மாவட்டத்தில் யுத்ததால் அதிகம் பாதிக்கப்பட மாந்தை பகுதியில் அபிவிருத்தி பணிகளை மேற்கொள்வதில் மாந்தை பிரதேச சபை செயளாலர் அசமந்த போக்குடன் செயற்படுவதாகவும் சபை தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவதில் அலட்சியம் காட்டுவதாகவும் குற்றம் சுமத்தியுள்ளனர்.

குறித்த விடயம் தொடர்பாக பல முறை உயர் அதிகாரிகளிடம் தெரிவித்தும் அவர்கள் இடம் மாற்றம் செய்வதாக கோரியும் இதுவரை இடமாற்றம் செய்யவில்லை எனவும் விரைவில் புதியதொரு ஆளுமையுள்ள பிரதேச செயளாலரை மாற்றி நியமிக்குமாறு கோரிக்கை விடுத்தே இவ் போராட்டத்தை நடாத்துவதாக இவர்கள் தெரிவித்தனர்.

# கடற்றொழில் அமைச்சர் பெரியகல்லாற்றுக்கு விஜயம்



**(ரக்ஸனா)**

கடற்றொழில் அமைச்சர் டக்லஸ் தேவானந்தா புதன்கிழமை(27) காலை மட்டக்களப்பு மாவட்டம் பெரியகல்லாறு சர்வாத்த சித்தி விநாயகர் ஆலயத்திற்கு விஜயம் செய்து வழிபாடுகளில் ஈடுபட்டார்.

இந்நிலையில் பெரியகல்லாறு பொது விளையாட்டு மைதானத்தை விஸ்த்தரித்து தருமாறு இதன்பேது பெரியகல்லாறு கிராமத்திலுள்ள விளையாட்டுக் கழகங்கள் அமைச்சரிடம் கடிதம் ஒன்றையும் வழங்கி வைத்தனர்.

# கடல்தோழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மட்டக்களப்பு மாவட்டத்திற்கு விஜயம்!!

**(மட்டக்களப்பு விசேட நிருபர்)**



கடல்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேற்றும் இன்றும் மட்டக்களப்பு மாவட்டத்தில் பல்வேறு பிரதேசங்களுக்கும் சென்று மீனவர்களது பிரச்சினைகளை கேட்றிந்து கொண்டதுடன் அதற்கான தீர்வுகளையும் பெற்றுக்கொடுத்திருந்தார்.

அதன்அடிப்படையில் வாழைச்சேனை வருகைதந்த அமைச்சர் மீன்பிடித்துறைமுகத்தில் பிரதேச மீனவர்கள் எதுர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக மீனவர்களுடனும் மீன்பிடித்தறைமுக அதிகாரிகளுடனும் கலந்துறையாடியதுடன் அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை உடனடியாக தீர்க்கக்கூடிய பிரச்சினைகளை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு உடனடியாக தீர்வினைப் பெற்றுக் கொடுத்ததுடன் ஏனைய பிரச்சினைகளுக்கு கட்டம் கட்டமாக தீர்வினை பெற்றுத்தருவதாக உறுதியளித்தார்.

அத்துடன் வாழைச்சேனை மீன்பிடித்துறைமுகத்தில் இருந்து தொழிலுக்காக கடந்த மாதம் 26ம் திகதி சென்ற படகு காணாமல் போன நிலையில் அந்தமான் தீவில் கடலோர காவளாலிகளால் பிடிக்கப்பட்டு பாதுகாப்பாக இருப்பதாகவும் அதில் உள்ள நான்கு மீனவர்களும் தேகாரோக்கியமாக இருப்பதாகவும் தெரிவித்த அமைச்சர் அவர்களையும் படகையும் நாட்டுக்கு அழைத்து வருவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாகவும் தெரிவித்தர்.

இதே வேளை காணாமல் போன படகின் குடும்ப உறுப்பினர்களை வாழைச்சேனை அல் ஸபா மீனவர் சங்கத்தில் சந்தித்த அமைச்சர் அவர்களிடம் மிக விரைவில் உங்களது குடும்ப உறுப்பினர்கள் வந்து சேர்வார்கள் என்றும் தெரிவித்தார்.

அமைச்சருடன் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் இராஜாங்க அமைச்சருமான எஸ்.வியாழேந்திரன், மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் மாவட்ட ஒருங்கிணைப்பு குழு தலைவருமான சிவநேசத்துரை சந்திரகாந்தன், வாழைச்சேனை பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் திருமதி நிருபா பிருந்தன், கடற்றொழில் அமைச்சின் உயர் அதிகாரிகள் மாவட்ட கடற்றொழில் திணைக்கள அதிகாரிகள், வாழைச்சேனை மீன்பிடித்துறைமுக அதிகாரிகள், மீனவர் சங்க பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# கோழும்பு டைம்ஸினால் சவூதி அரேபியாவுக்கான புதிய இலங்கை தூதுவருக்கு கௌரவிப்பு

**(சில்மியா யூசுப்)**



சவுதி அரேபியாவுக்கு புதிய தூதுவராக நியமிக்கப்பட்ட பீ.எம் ஹம்ஸாவுக்கு சனிக்கிழமை கொழும்பு டைம்ஸ் ஸ்தாபகரும் மற்றும் அரபு செய்தி நிருபருமான மொஹமட் ரஸுல் தீனால் தேநீர் விருந்து உபசாரம் வழங்கப்பட்டது.

குறிந்த இந் நிகழ்வானது கொழும்பு மென்டரினா ஹோட்டலில் கடந்த சனிக்கிழமை மாலை மிக சிறப்பான முறையில் நடை பெற்றது.

இவ்வைபத்தில் பங்களாதேஷ் தூதுவர் தாரிக் எம்.டி ஆரிபுல் இஸ்லாம் மற்றும் துருக்கிய தூதுவர், பாகிஸ்தான் தூதரகத்தின் உயர் அதிகாரி, முன்னாள் குவைட் நாட்டுக்கான தூதுவர் ,வெளிநாட்டு அமைச்சின் பணிப்பாளர்,வை.எம்.எம்.ஏ. இன் தலைவர், டெய்லி நிவ்ஸின் செய்தி ஆசிரியர், டெய்லி மிரர் பிரதி ஆசிரியர் ,எஸ்.வை.நிவ்ஸின் ஸ்தாபகர் மற்றும் கொழும்பு டைம்ஸின் சைய்தி ஆசிரியர் மற்றும் மென்டரினா ஹொடலின் ஸ்தாபகர் என பலரும் இந் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

# ஞானசார தேரரின் நியமனம் கண்டிக்கத்தக்கது

**(ஏ.பி.எம்.அஸ்ஹர்)**



ஞானசார தேரரின் நியமனம் கண்டிக்கத்தக்கது என.திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம். முஷாரப் தெரிவித்துள்ளார்.

அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது;

விஷேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட ஒரே நாடு ஒரே சட்டம் என்பதற்கான செயலணியின் தலைவராக கலகொடஅத்தே ஞானசார தேரர் அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளமை எந்த வகையிலும் ஏற்றுக் கொள்ள முடியாதது.

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கையானது தேரர் குறித்து நடவடிக்கை எடுக்க பரிந்துரைக்கின்ற அதே வேளை நீதிமன்றத்தை அவமதித்த குற்றவாளியாக தீர்ப்பளிக்கப்பட்டு தண்டனை பெற்ற ஒருவரே ஞானசார தேரர் என்பதும் குறிப்பிடத் தக்கது.

மட்டுமன்றி ஞானசார தேரர் இஸ்லாமிய நம்பிக்கைகள் மற்றும் முஸ்லிம்கள் தொடர்பாக தொடர்ச்சியான வெறுப்புப் பிரச்சாகராக தொழிற்பட்டு வரும் ஒருவர். அவ்வாறான ஒருவர் ஒரே நாடு ஒரே சட்டம் என்பதற்கான செயலணிக்கு தலைமை தாங்க எந்த விதத்திலும் பொருத்தமற்றவர். ஜனாதிபதியின் இந்த நியமனம் பொருத்தமற்றதும் கண்டனத்திற்கும் உரியது.ஏ.பி.எம்.அஸ்ஹர்

# அம்பாரை மாவட்ட பெண்கள் வலையமைப்பினால் மூன்று பெண்களுக்கான உதவித்தொகை

**(வி.சுகிர்தகுமார் )**



அம்பாரை மாவட்ட பெண்கள் வலையமைப்பினால் ஆலையடி வேம்பு பிரதேச செயலகத்திற்குட் பட்ட சுயதொழில் முயற்சியில் ஈடுபடும் மூன்று பெண்களுக்கான உதவித்தொகை வழங்கி வைக்கப் பட்டது.

ஆலையடிவேம்புவாச்சிக்குடா பிரிவில் வாழும் மட்பாண்ட தொழிலில் ஈடுபடும் மூவருக்கே கூட்டுத்தொழில் முயற்சிக்கான உதவித்தொகையாக 30 ஆயிரம் ரூபா வழங்கி வைக்கப்பட்;டது.

அம்பாரை மாவட்ட பெண்கள் வலையமைப்பின் கள உத்தியோகத்தர் கே.விதுர்ஷனா ஏற்பாட்டில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதேச செயலக சிறுவர் மகளிர் பிரிவைச் சேர்ந்த மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எல்.முஸ்பிறா சிறுவர் மேம்பாட்டு அபிவிருத்தி உத்தியோகத்தர் எச்.எல்.இஸ்பானா மகளிர் அபிவிருத்தி கள உதவியாளர் எஸ்.எ.எம்.எஸ்.பர்ஹானா உளவளத்துணை உத்தியோகத்தர் எ.எம்.சப்ரினா உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டு காசோலையை வழங்கி வைத்தனர்.







Sj
SRI JEWELLERY
Swiss, Zürich இல் மிகப்
பிரமாண்டமாய் புதுப்பொலிவுடன்
பரம்பரை பரம்பரையாக
நகைத் தொழிலில்
அனுபவம் பெற்றவர்கள் நாங்கள்
வைர தாலி கொடி, மோதிரம், வளையல்
பெயர் பெண்டன், மற்றும் அனைத்து
நகைகளும் செய்து தரப்படும்.
திருத்த வேலைகளும் உடனுக்குடன்
செய்து தரப்படும்.
+41 43 366 80 09 / +41 79 898 51 01
Mattengasse 17, 8005, Zürich, Swiss
info@srijewellery.ch


Sikaram
துரிதபணமாற்றுச்சேவை
Sikaram INTL Gmbh
Heinrich Strasse 120, 8005 Zürich
sikaramgmbh@gmail.com / www.sikaram.com
Tel : 044 2410241
Fax : 044 2410245


Prasath Coiffeur
Öffnungszeiten
Mo -Fr 10.00-19.00
Sa 09.00-18.00
Heinrichstrasse 120, 8005 Zürich.
NAT:076 565 64 57


Allegrotto Pizza Kurier
Allegrotto Pizza Kurier
Bederstrasse 102, 8002 Zürich.
044 280 40 30 | 076 326 91 18
Toll free 0844 80 40 30
pizzakingzurich@gmail.com.
www.allegrotto.ch
Seela Food Gastro AG
044 222 22 50
076 326 91 18
info@seelagastro.ch
www.seelagastro.ch
Züricherstrasse 15
8400 Winterthur.


SwissLife Select
சுவிசில் சொந்த வீடு
வாங்க விரும்பும் உறவுகளே,
அவதானமாகச் செயற்படுங்கள்.
உங்கள் கடனுக்கான வட்டி வீதம்
எப்போதும் அதிகரிக்க கூடும்.
எனவே, சரியான வங்கியையும்,
வட்டி வீதத்தையும்
தெரிந்து கொள்ளுங்கள்.
உங்கள் வாழ்வின் சகல
அம்சங்களிலும் உங்களோடு
கரங் கோர்க்கும்
ஒரே ஒரு நிறுவனம்...
மருத்துவ காப்புறுதி
வாகனக் காப்புறுதி
குழந்தைகளுக்கான காப்புறுதி
ஆயுட் காப்புறுதி
சட்டக் காப்புறுதி
Herr Krishnasamy
THILEEPAN
Dipl.Finanzberater IAF
Cicero : 15787
FIDLEG : KT 47598
Swiss Life Select AG
Zweigniederlassug Bern-Köniz
Sägerstrasse 79, 3098 Köniz.
Email : krishnasamy.thileepan@swisslife-select.ch Web : www.swisslife-select.ch
Telefon : 031 915 00 50 Telefax : 031 915 00 60 Handy : 079 889 60 65


Aaran Ayurveda
& Wellness Massage
Stampfenbachstrasse-24, 8001 Zurich, Tel: 043 243 60 66
Mobile: 079 940 1510 | www.aaranayurveda.ch
Krankenkasse Anerkannt


5ம், 6ம் ஆண்டு மாணவர்களுக்கான
புதிய கணினி வகுப்புக்கள் ஆரம்பம்
எங்கே? சூரிச் மாநகரில் கணினித்துறையில்
நூற்றுக்கணக்கான மாணவர்களை உருவாக்கிய
Online Tech Network
நிறுவனத்தில்
ECDL
Office
Windows 10
தொடர்புகளுக்கு
MANOJ MASTER
Online Tech Network
Militärstrasse 84, 8004 Zürich
043 811 80 90, 076 524 80 59

# படகு சேவையினை முன்னெடுப்பதற்காக தமிழ் தேசிய முன்னணியினால் நிதி ஒதுக்கீடு







**க.ருத்திரன்**

மட்டக்களப்பு வாழைச்சேனை பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள கிண்ணையடி துறைக்கு மக்களின் போக்குவரத்தினை கருத்தில் கொண்டு படகு சேவையினை முன்னெடுப்பதற்காக தமிழ் தேசிய மக்கள் முன்னனியினரால் ஒரு தொகுதி படகுகள் வழங்கப்பட்டன. வ

வடமாகாண பாராளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரனின் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவு திட்ட நிதி ஒதுக்கீட்டில் இருந்து ரூபா 3 இலட்சம் இவ் படகு சேவைக்கு ஒதுக்கப்பட்டிருந்தது.

இச்சேவைக்கான வெள்ளோட்டம் நேற்று செவ்வாய் கிழமை கோறளைப்பற்று பிரதேச சபை உறுப்பினர் கு.குணசேகரம் தலைமையில் நடைபெற்றது.

இவ் நிகழ்வில் அதிதிகளாக தமிழ் தேசிய மக்கள் முன்னனி கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், மாவட்ட இணைப்பாளர் த.சுரேஸ் மற்றும் ஆலய நிர்வாகிகள், விவசாயிகள் என பலரும் கலந்து கொண்டனர். கிண்ணையடி துறைக்கூடாக பிரம்படித்தீவு, பூலாக்காடு, முருக்கன் தீவு, பொண்டுகள்சேனை, கல்லடிவெட்டை, முறுத்தானை என பல்வேறு கிராமங்களில் வாழும் மக்கள் தமது போக்குவரத்தினை இலகுவாக மேற்கொண்டு வருகின்றனர். அண்மையில் வழமையான சேவையில் ஈடுபட்டிருந்த படகுகள் சேதமடைந்ததன் காரணமாக கிண்ணையடி ஆற்றை கடந்து செல்வதில் மக்கள் தமது போக்குவரத்தில் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வந்தனர். இந்நிலமை தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரனிடம் பிரதேச சபை உறுப்பினர். கு.குணசேகரம் விடுத்த வேண்டுகோளினையடுத்து இவ் மனிதநேய உதவி வழங்கப்பட்டுள்ளது. இதன்மூலம் விவசாய அறுவடை உள்ளீடுகள், கால்நடை உற்பத்தி பொருட்கள் ,என பல்வேறு விடயங்களுக்கு வசதியாகவுள்ளதாகவும் மக்கள் மகிழ்ச்சி தெரிவித்தனர்.

# மன்னாரில் மொழி சமத்துவம் தொடர்பான விசேட செயலமர்வு



**வாஸ் கூஞ்ஞ**

மொழி சமத்துவத்தை மேம்படுத்துவதன் ஊடாக சமூக ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கத்துக்கான கூட்டு நடவடிக்கையை மேற்கொள்ளும் முகமாக தேசிய ரீதியில் செயற்பட்டு வரும் கிழக்கு அபிவிருத்தி மையத்தின் ஏற்பாட்டில் தேசிய மொழிகள் உரிமை மன்னார் மாவட்ட செயலகப் பிரிவும். முன்னார் மாவட்ட மாற்று திறனாளிகள் பெண்கள் அமைப்பும் இணைந்து இவ் விசேட செயலமர்வை மன்னார் தனியார் விருந்தினர் விடுதியில் செவ்வாய் கிழமை காலை 10 மணியளவில் நடாத்தினர்.

குறித்த நிகழ்வில் தேசிய மொழிகள் மேம்பாட்டு திட்டத்தின் பணிப்பாளர்இபிரதிப்பணிப்பாளர்இகொள்கையாக்கல் மற்றும் கற்பித்தல் நிபுணர்களால் மொழிக்கொள்கை தொடர்பான விசேட விரிவுரைகள் வழங்கப்பட்டன.

குறித்த நிகழ்வில் கிழக்கு சமூக அபிவிருத்தி மைய செயற்படுத்துனர்கள் மற்றும் மன்னார் நிர்வாக துறை உயர் அதிகாரிகள் பொலிஸார் ஊடகவியளாலர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்

குறித்த கருத்தமர்வில் மொழி ரீதியான உரிமைகள் தொடர்பாக நடைமுறைப்படுத்த வேண்டிய செயற்பாடுகள் மற்றும் மேற்கொள்ள வேண்டிய மாற்றங்கள் தொடர்பாக பங்குபற்றுனர்களின் கருத்துக்கள் உள்வாங்கப்பட்டு அவை அரச கருமொழி ஆணைக்குழுவிற்கு அனுப்பி வைக்கப்படவுள்ளதுடன் குறித்த செயற்திட்டம் இலைங்கையில் உள்ள 8 மாவட்டங்களில் அதாவது அனுராதபுரம், மொனராகலை, மன்னார், புத்தளம், திருகோணமலை, அம்பாறை மற்றும் மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் இவ் திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை இங்கு குறிப்பிடதக்கது.

# முஸ்லிம் சட்டத்தை இல்லாதொழிக்கும் திட்டத்தை கண்டித்து கல்முனை மாநகர சபையில் பிரேரணை நிறைவேற்றம்

**அஸ்லம் எஸ்.மௌலானா**

முஸ்லிம் தனியார் சட்டத்தை இல்லாதொழிக்கும் அரசின் திட்டத்திற்கு எதிரான கண்டனப் பிரேரணை கல்முனை மாநகர சபையில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

கல்முனை மாநகர சபையின் மாதாந்த பொதுச் சபை அமர்வு செவ்வாய்க்கிழமை பிற்பகல் மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீப் தலைமையில் இடம்பெற்றது. இதன்போது மாநகர சபையின் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினரான சட்டத்தரணி ரொஷான் அக்தரினால் இக்கண்டனப் பிரேரணை கொண்டு வரப்பட்டது.

இதனை கல்முனை மாநகர சபையின் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் உறுப்பினரான பி.எம்.ஷிபான் வழிமொழிந்து உரையாற்றினார். தமிழ் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர் ஹென்றி மகேந்திரன், சாய்ந்தமருது சுயேட்சைக்குழு உறுப்பினர் ஏ.ஆர்.



எம்.அஸீம் ஆகியோரும் பிரேரணையை ஆதரித்து கருத்துத் தெரிவித்தனர்.

இலங்கை வாழ் முஸ்லிம் சமூகம் பன்னெடுங்காலமாக அனுபவித்து வருகின்ற முஸ்லிம் விவாக, விவாகரத்து சட்டம் மற்றும் அதன் கீழ் வருகின்ற காதி நீதிமன்றம் என்பவற்றை இல்லாதொழிப்பதற்கு பேரினகடும்போக்குவாதத்தை கடைப்பிடித்து வருகின்ற இந்த அரசாங்கம் திட்டமிட்டு முன்னெடுத்து வருகின்ற நடவடிக்கைகள் மிகவும் கவலைக்கும் கண்டனத்துக்குமுரிய விடயமாகும் என உறுப்பினர்கள் சுட்டிக்காட்டினர்.

ஆகையினால் இச்சட்டத்தில் முஸ்லிம் தரப்பினரால் முன்வைக்கப்படுகின்ற தேவையான திருத்தங்களை மேற்கொண்டு, இச்சட்டமும் அதன் கீழான காதி நீதிமன்றமும் தொடர்ந்து அமுலில் இருப்பதற்கு அரசாங்கம் இடமளிக்க வேண்டும் எனவும் இதன்போது கோரிக்கை விடுக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து முஸ்லிம் தனியார் சட்டத்தை இல்லாதொழிக்கும் அரசின் திட்டத்திற்கு எதிரான கண்டனப் பிரேரணை தமிழ் உறுப்பினர்களினதும் ஆதரவுடன் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

கல்முனை மாநகர சபையின் இத்தீர்மானம் தொடர்பில் ஜனாதிபதி, பிரதமர், நீதி அமைச்சர் மற்றும் சம்மந்தப்பட்ட தரப்பினருக்கு உடனடியாக அறிவிக்குமாறு மாநகர முதலவர், சபைச் செயலாளரை அறிவுறுத்தினார்.

# கல்முனை பழைய தபாலக வீதிக்கு ஏ.ஆர்.மன்சூரின் பெயரை சூட்டத் தீர்மானம்



**அஸ்லம் எஸ்.மௌலானா**

கல்முனை பழைய தபாலாக வீதிக்கு முன்னாள் அமைச்சர் மர்ஹூம் ஏ.ஆர்.மன்சூரின் பெயரை சூட்டுவதற்கு கல்முனை மாநகர சபை ஏகமனதாகத் தீர்மானித்துள்ளது.

கல்முனை மாநகர சபையின் மாதாந்த பொதுச் சபை அமர்வு செவ்வாய்க்கிழமை பிற்பகல் மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீப் தலைமையில் இடம்பெற்றது. இதன்போது குறித்த வீதியின் பெயரை ஏ.ஆர்.மன்சூர் வீதி என பெயர் மாற்றம் செய்வதற்கான பிரேரணை மாநகர முதல்வரினால் முன்மொழியப்பட்டது.

1977ஆம் ஆண்டு தொடக்கம் 1994ஆம் ஆண்டு வரை கல்முனைத் தொகுதி பாராளுமன்ற உறுப்பினராகவும் சுமார் 06 வருடங்கள் வர்த்தக, வாணிப, கப்பல்துறை அமைச்சராகவும் பதவி வகித்து, இப்பிராந்தியத்திற்கும் நாட்டுக்கும் இன, மத, பிரதேச வேறுபாடுகளின்றி உன்னத சேவையாற்றி, எம்மை விட்டு மறைந்த மர்ஹூம் ஏ.ஆர்.மன்சூரின் பெயரை இவ்வீதிக்கு சூட்டுவதையிட்டு மகிழ்ச்சியடைவதாக மாநகர முதல்வர் ஏ.எம்.றகீப் இதன்போது குறிப்பிட்டார்.

இப்பிரேரணையை தமிழ் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர் ஹென்றி மகேந்திரன் வழிமொழிந்ததுடன் முன்னாள் அமைச்சர் ஏ.ஆர்.மன்சூர் கல்முனைத் தொகுதிக்கு ஆற்றியிருக்கின்ற சேவைகளை நினைவுகூர்ந்து, அன்னாரின் பெயரை பொருத்தமான வீதியொன்றுக்கு சூட்டுவது அவசியம் எனவும் அதற்காக எடுக்கப்படுகின்ற இந்த நடவடிக்கையை வரவேற்பதாகவும் குறிப்பிட்டார். அவர் தமது அரசியல் பொது வாழ்வில் கறைபடியாத கரங்களைக் கொண்ட ஓர் அரசியல் தலைமையாக எல்லோராலும் போற்றப்படுகிறார் என்றும் உறுப்பினர் ஹென்றி சுட்டிக்காட்டினார்.

இதனைத் தொடர்ந்து குறித்த பிரேரணை அனைத்து உறுப்பினர்களினதும் ஆதரவுடன் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் இப்பெயர் சூட்டலுக்கு கல்முனை மாநகர சபை தீர்மானிப்பதாகவும் இதற்காக மேற்கொண்டு எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறும் மாநகர முதலவர், சபைச் செயலாளரை அறிவுறுத்தினார்.

# திருமலை கடலில் எண்ணெய்க் கசிவை ஏற்படுத்திய குற்றச்சாட்டின் பேரில் வழக்கு தொடரப்பட்டிருந்த இரண்டு நபர்களுக்கு பிணை

**எப்.முபாரக்**

திருகோணமலை கடலில் எண்ணெய்க் கசிவை ஏற்படுத்திய குற்றச்சாட்டின் பேரில் வழக்கு தொடரப்பட்டிருந்த இரண்டு நபர்களுக்கு பத்து இலட்சம் ரூபா பிணையில் செல்ல அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

திருகோணமலை மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் முன்னிலையில் செவ்வாய்கிழமை இவ்வழக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே குறித்த கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

2015ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 2ஆம் திகதி கல்ப் ஏஜென்சி மற்றும் இ எல் எஸ் கன்றாக்சன் பிரைவேட் லிமிடெட் ஆகிய இரண்டு கம்பெனிகளுக்கு சொந்தமான பாச் என்று அழைக்கப்படும் இயந்திரத்திலிருந்து கடலுக்குள் எண்ணைக் கசிவை ஏற்படுத்தியமை தொடர்பில் கடல்வள பாதுகாப்பு அதிகாரசபை மற்றும் மாவட்ட செயலகம் இணைந்து திருகோணமலை துறைமுக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தனர்.

இந்நிலையில் இந்த முறைப்பாடுகள் குறித்து இரண்டு கம்பெனிகளுக்கு சொந்தமான இருவரையும் திருகோணமலை நீதிமன்றில் முன்னிறுத்திய போது கடல் எல்லையில் கடலை மாசுபடுத்திய குற்றச்சாட்டின் பேரில் பத்து இலட்சம் ரூபாய் பிணையில் செல்ல திருகோணமலை மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் கட்டளை பிறப்பித்தார்.

அத்துடன் கடலை மாசு படுத்தியமை தொடர்பில் இதுவரைகாலமும் கொழும்பு மேல் நீதிமன்றில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு வந்துள்ள நிலையில் முதல் தடவையாகக் கிழக்கு மாகாணத்தின் திருகோணமலை மேல் நீதிமன்றில் கடலை மாசு படுத்திய குற்றச்சாட்டின் கீழான வழக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

மேலும் குறித்த இரண்டு நபர்களையும் எதிர்வரும் டிசம்பர் மாதம் 9 ஆம் திகதி திருகோணமலை மேல் நீதிமன்றத்திற்கு சமூகமளிக்குமாறும் நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் கட்டளையிட்டார்.

# சௌபாக்கியா உற்பத்தி கிராம வேலைத்திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு





**ஹஸ்பர் ஏ ஹலீம்**

கந்தளாய் பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட சௌபாக்கியா உற்பத்தி கிராம வேலைத்திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு கந்தளாய் பிரதேச செயலகத்தில் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் ஒருங்கிணைப்பு குழுவின் தலைவருமாகிய கபில நுவன் அத்துகோரல தலைமையில் நடைபெற்றது.

சௌபாக்யா உற்பத்தி கிராம வேலைத்திட்டத்தின் கீழ் திருகோணமலை மாவட்டத்தில் 16 வேலைத்திட்டங்கள் இதுவரை அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் சிறந்த உற்பத்திசார் முன்மொழிவுகள் கிடைக்கப் பெறுகின்ற சந்தர்ப்பத்தில் அவற்றை வழங்கக் கூடியதாக அமையும் என்று இதன்போது மாவட்ட அரசாங்க அதிபர் சமன் தர்சன பாண்டிகோராளதெரிவித்தார்.

சௌபாக்யா உற்பத்தி கிராம வேலைத்திட்டத்தின் கீழ் ஒரு கிராமத்தின் அபிவிருத்திக்காக அரசாங்கம் அண்ணளவாக ஒரு கோடி ரூபாவுக்கும் மேற்பட்ட நிதியை செலவிட உள்ளது. இதன் மூலம் கிராமிய மக்களின் வாழ்வாதாரத்தை வலுப்படுத்தி வருமானம் ஈட்டுகின்ற பொறிமுறையை ஏற்படுத்தக் கூடியதாக அமையும் என்று பாராளுமன்ற உறுப்பினர் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் கந்தளாய் பிரதேச தவிசாளர் சமன் ஏக்கநாயக்க, கந்தளாய் பிரதேச செயலாளர் உபேக்சா குமாரி, முன்னாள் கிழக்கு மாகாண அமைச்சர் ஆரியவதி கலபதி ,அரசியல் பிரமுகர்கள் ,அரச அதிகாரிகள் மற்றும் பொதுமக்களும் கலந்து கொண்டனர்.

# ஆளுநருக்கான கோரிக்கை

**ஏ.பி.எம்.அஸ்ஹர்**



கிழக்கு மாகாணத்திற்கு புதிய ஆளுநர் ஒருவர் நியமிக்கப்படவுள்ளதாக செய்திகள் வெளியானதையடுத்து அண்மையில் ஓய்வுபெற்ற கிழக்கு மாகாண முதலமைச்சின் முன்னாள் செயலாளர் யூ.எல்.ஏ.அஸீஸை நியமிக்குமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணத்துக்கு புதிய ஆளுநர் ஒருவரை நியமிக்க அரச உயர் மட்டத்தில் ஆலோசிக்கப்பட்டு வருவதாகத்தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில் அந்த ஆளுநர் பதவிக்கு தகுதியானவரும் மூவின மக்களையும் அரவனைத்துச் செல்லக்கூடிய ஆளுமையுள்ள அனுபவமுள்ள ஒருவராக கிழக்கு மாகாண முதலமைச்சின் முன்னாள் செயலாளர் யூ.எல்.ஏ.அஸீஸ் உள்ளார் எனவே இவரை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

இதே வேளை இவரை நியமிக்குமாறு அரசியல் உயர்மட்டங்களினால் அரசுக்கு பரிந்துரைக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.




# காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பாக இளைஞர் ஆய்வு வெளியீடு



வடமலை ராஜ்குமார்

விழுது ஆற்றல் மேம்பாட்டு மையத்தின் செயற்திட்டத்தில் திருகோணமலை மாவட்ட இளைஞர்களால் மேற்கொள்ளப்பட்ட சமூக ஆய்வுப் பணயத்தில் இளையோர் பங்குபற்றுதலின் பிரதிபலிப்புக்கள் என்ற தலைப்பிலான ஊடக சந்திப்பு திருகோணமலை மாவட்ட விழுது ஆற்றல் மேம்பாட்டு மைய அலுவலகத்தில் இடம்பெற்றது.

இதன் போது இளைஞர்கள் மேற்கொண்ட ஆய்வுகளின் அறிக்கை வெளியிடப்பட்டது இதில் காணாமல் ஆக்கப்பட்டோரின் குடும்பங்களும் அவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளும் சவால்களும், போதைப்பொருள் பாவனையும் இளையோர் சமுதாயமும், தமிழ் மக்களும் மொழி உரிமையும் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் தேவைப்பாடு அதன் பிரயோக நிலையும் என்ற தலைப்புக்களிலான ஆய்வறிக்கைகள் வெளியிடப்பட்டது.

மூதூர் மல்லிகைத்தீவு கிராமத்தைச் சேர்ந்த 30 குடும்பங்களை மாதிரியாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் படி பின்வரும் தகவல்கள் வெளியாகியுள்ளது. என ஆய்வுகளை மேற்கொண்ட இளைஞர்கள் வெளியிட்ட தகவல்கள் தெரிவிக்கின்றது.

காணாமல் ஆக்கப்பட்டோரின் பிரச்சினை தொடர்பாக இவ்வாறு தெரிவித்தார்கள்

2009 யுத்தத்தின் போதும், அதற்கு முன்னரும் வடக்கு கிழக்கில் அதிகளவானோர் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர்.

காணாமல் ஆக்கப்பட்டோரில் சிலர் 20 லட்சம் வரையில் பணம் பெறப்பட்டு விடுவிக்கப்பட்டுள்ளார்கள்.

காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகம் 2017 ஆம் ஆண்டு தொடக்கப்பட்டது.

ஆட்சி மாற்றங்கள் காலத்திற்கு காலம் இடம்பெற்ற போதிலும் கூட எந்த விதமான தீர்வினையும் பெற்றுக் கொடுக்கவில்லை. இவ்வாறு ஆண்டுகள் கடந்து செல்கின்றதே தவிர மக்களுக்கு எவ்விதமான தீர்வினையும் பெற்றுக் கொடுக்கவில்லை.

**நீதிக்கான பரிந்துரைகள்**

1.சகலவிதமான நியாமற்ற கைதுகளும் சித்திரவதைக்கு உட்படுத்தலையும் கைது செய்யப்பட்டபோது நிகழ்ந்த உயிர் இழப்புக்களுக்டகாவும் விசாரனைகள் சரியான முறையில் மேற்கொள்ளப்பட வேண்டும்.

2.காணமல் ஆக்கப்பட்டோர்; தொடர்பாக நடைபெறும் விசாரணைகள கொழும்பு மேல் நீதிமன்ற விசாரனைகளில் இருந்து விடுபட்டு மாவட்ட நீதிமன்றங்களின் விசாரனைகளின் கீழ் கொண்டுவரப்பட வேண்டும்.

3.தொழில் மற்றும் வாழ்க்கை தரத்தினை மேம்படுத்துவதற்கான வேலைத் திட்டங்களை நடைமுறைப்படுத்தல் வேண்டும்.

**நினைவு கூறுதலுக்கான பரிந்துரைகள்**

4.காணாமல் ஆக்கப்பட்டோர் குடும்பங்களிடம் மறைந்து இருக்க கூடிய ஆளுமை தன்னம்பிக்கை, துணிவு, மனவுறுதி என்பவற்றை வெளிக்கொணர்வதன் மூலமாக பயிற்சிப் பட்டறைகள், கருத்தரங்குகள், என்பவற்றை நடாத்தி, சமூகத்தில் அவர்களையும் எழுச்சி பெறச் செய்ய வேண்டிய பொறுப்பு அரசு , அரச சார்பற்ற நிறுவனங்கள் கவனம் செலுத்த வேண்டும்.

என இளைஞர்களின் ஆய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# திருகோணமலையில் கொரோனாத் தொற்று நீக்கி உபகரணங்கள் வழங்கி வைப்பு



அ . அச்சுதன்

இலங்கை தேசிய சமாதானப் பேரவையின் ஏற்பாட்டில் திருகோணமலை மாவட்டத்தில் உள்ள முக்கியமான அரச அலுவலகங்களுக்கு தலா 35000 ரூபாய் பெறுமதியான கொரோனாத்தொற்று நீக்கீ உபகரணங்களான Spray Machines, Hand Washing Sink மற்றும் PPE Kits ஆகியன குறிப்பிட்ட அலுவலகங்களில் வைத்து வழங்கப்பட்டது.

சேவிங் ஹியூமானிட்டி பவுன்டேசன் (Serving Humanity Foundation) அமைப்பின் ஒருங்கிணைப்புடன் நடைபெற்ற இந்நிகழ்வில் உதவி பிரதேச செயலாளர் திருமதி. சத்யபிரியா, சுகாதார வைத்திய அதிகாரி திருகோணமலை வைத்தியர் விஜய்குமார், திருகோணமலை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் திரு. பிரசன்ன பிராஃமன, ஊழியர் சேமலாப நிதியத்தின் முகாமையாளர் திரு.ஹேவாகம மற்றும் இந் நிறுவனத்தின் செயற்றிட்ட அதிகாரிக ஆஷிக் அலாப்தீன் ஆகியோர் கலந்து சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது.

# திருக்கோவில் பிரதேசத்தில் நகைகள் பணம் திருட்டு சந்தேக நபர் பொது மக்களால் மடக்கிப்ப பிடிப்பு

திருக்கோவில் நிருபர்

அம்பாரை திருக்கோவில் பொலிஸ்ப் பிரிவுக்குட்பட்ட விநாயகபுரம் பிரதான வீதியில் உள்ள உஷா நகையகம் பட்டப்பகலில் கொல்லையிடப்பட்டுள்ளதாக தெரிக்கப்பட்டு ஒருவர் சந்தேகத்தில் கைது செய்யப்பட்டுள்ளதாக திருக்கோவில் பொலிசார் தெரிவித்துள்ளனர்

இச்சம்பவம் செவ்வாய்க் கிழமை (26) பிற்பகல் வேளையில் இடம்பெற்று இருந்ததாக நகைக்கடை உரிமையாளர் தெரிவித்து இருந்தார்.

குறித்த திருட்டுச்சம்பவம் தொடர்பாக பொலிசாரின் ஆரம்ப கட்ட விசாரணைகள் ஊடாக தெரியவருவது யாதெனில் நேற்று பிற்பகல் 3.30 மணிளயவில் நகைக் கடைக்குள் நுழைந்த சந்தேக நபர் கடையில் இருந்த நபருக்கு மிளகாய்த் தூள் விசிறி நகைகளை கொள்ளையடிக்க முட்பட்டுள்ளார்

இதன்போது நகைக் கடையில் இருந்த கடை உரிமையாளரின் மருமகனுக்கும் சந்தேக நபருக்கும் இடையில் சண்டையிடும் காட்சிகள் அங்கு பொறுத்தப்பட்டு இருந்த சீசீடி கமரா பதிவாகி இருந்தன.

இதனைத் தொடர்ந்து சம்பவ இடத்திற்கு வந்த நகைக்கடை உரிமையாளர் மற்றும் பொது மக்கள் குறித்த நபரை மடக்கிப் பிடித்து பொலிசாரிடம் ஒப்படைத்து இருந்தாக கடை உரிமையாளர் தெரிவித்து இருந்தார்.

இவ் சம்பவம் தொடர்பாக திருக்கோவில் பொலிசார் அம்பாரை குற்றத் தடையாய்வு பொலிசாருடன் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதுடன் குறித்த சந்தேக நபர் பொலிசாரினால் விசாரினைகள் இடம்பெற்று வருவதும் குறிப்பிடத்தக்கது.

# மலசலகூட நிர்மாணிப்புக்கான 30 பயனாளிக்கு காசேலை வழங்கும் அங்குராாப்பன நிகழ்வு



ஹஸ்பர் ஏ ஹலீம்

வன்னி ஹோப் மற்றும் கிழக்கு மாகாண வீடமைப்பு அதிகார சபை ஆகிய நிறுவனத்தின் நிதி அனுசரணையில் மக்கள் சேவை மன்றத்தினால் மலசலகூட நிர்மாணிப்புக்கான 30 பயனாளிக்கு காசேலை வழங்கும் அங்குராாப்பன நிகழ்வு திருகோணமலையில் உள்ள கிழக்கு மாகாண வீடமைப்பு அதிகார சபை கேட்போர் கூடத்தில் அதிகார சபையின் தவிசாளர் ஜே. ஜனார்த்தனன் தலைமையில் இடம்பெற்றது.

திருகோணமலை மாவட்டத்தில் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மலசலகூட வசதிகளின்றி சுகாதார ரீதியான பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்து வரும் குடும்பங்களுக்கு வன்னி ஹோப் அவுஸ்ரேலியா நிறுவனமும் கிழக்கு மாகாண வீடமைப்பு அதிகார சபையும் இணைந்து மலசலகூடங்களை நிர்மாணிப்பதற்கு முன்வந்ததையடுத்து முதற்கட்டமாக முப்பது குடும்பங்களுக்கான காசோலைகள் மக்கள் சேவை மன்றத்தினால் வழங்கி வைக்கப்பட்டது.

கிழக்கு மாகாணத்தில் சுமார் 27,000 வீடுகள் நிர்மாணிப்பதற்கான தேவைகள் இருப்பதாகவும், கோவிட் பரவல் காரணமாக இந்த வருடம் கிழக்கு மாகாண வீடமைப்பு அதிகார சபைக்கான நிதி ஒதுக்கீட்டில் கனிசமான அளவு ஒதுக்கீடுகள் குறைக்கப்பட்டதால் மலசலகூடம், மற்றும் வீடுகள் நிர்மாணிப்பு பணிகள் நிறுத்தப்பட்ட நிலையில் வன்னி ஹோப் நிறுவனமும் மக்கள் சேவை மன்றமும் எமக்கு கைகொடுத்தன் விளைவாக எமது வருடாந்த செயற்றிட்டத்தினை முன்னெடுக்க முடிந்தது.

இதற்காக நிதி வழங்கிய வன்னி ஹோப் நிறுவனத்திற்கும் மக்கள் சேவை மன்றத்திற்கும் வீடைமைப்பு அதிகார சபை சார்பாகவும், கிழக்கு மாகாண ஆளுநர் செயலகம், கிழக்கு மாகாண நிதி திணைக்களம் சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன் எதிர்காலத்தில் இது போன்ற செயற்றிட்டங்களுக்கு தாங்கள் முழு ஒத்துழைப்பினை வழங்குவதற்கு தயாாரா இருபப்தாகவும் கிழக்கு மாகாண வீடமைப்பு அதிகார சபையின் பொது முகாமையாளர் இரா. நெடுஞ்செழியன் இதன் போது தெரிவித்தார்.



இந்த நிகழ்வில் வீடமைப்பு அதிகார சபையின் பொது முகாமையாளர் இரா. நெடுஞ்செழியன், கிழக்கு மாகாண முதலமைச்சின் பிரதம கணக்காளர் எம். ஐ. எம். முஸ்தபா, மக்கள் சேவை மன்றத்தின் தலைவர் எம். ரீ. எம். பாரிஸ் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

# கட்டிடங்களின் நிலையறிய சுகாதார அமைச்சின் கட்ட நிர்மான பிரிவினர் அட்டாளைச்சேனை, நிந்தவூர் பிரதேசங்களுக்கு விஜயம்

நூருல் ஹுதா உமர்

கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஏ.ஆர். எம். தௌபீக் சுகாதார அமைச்சுக்கு முன்வைத்த கோரிக்கைக்கு அமைய அட்டாளைச்சேனையில் நிர்மாணிக்கப்பட்டு வரும் வைத்தியசாலை கட்டிடத்தை பூரணமாக கட்டிமுடிப்பது தொடர்பில் ஆராயும் களவிஜயம் சுகாதார அமைச்சின் கட்ட நிர்மான பிரிவின் பணிப்பாளர் ஸ்ரீரஜீபன் அடங்கிய குழுவினரின் பங்கெடுப்புடன் இடம்பெற்றது.

வைத்தியசாலை அபிவிருத்திக்குழுவின் செயலாளர் எம்.ஐ. நபீல், அபிவிருத்திக்குழுவின் ஆலோசகர் டாக்டர் கே.எல். நக்பர், யூ.எல். வாஹித், மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் முனாஸ்தீன் போன்றோர் விடுத்த வேண்டு கோளுக்கிணங்க அட்டாளைச்சேனை யில் நிர்மாணிக்கப்பட்டு வரும் வைத்தியசாலை கட்டிடத்தை விரைவாக பூரணப்படுத்தவது தொடர்பில் இதன்போது ஆராயப்பட்டது. இந்த களவிஜயத்தில் கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஏ.ஆர்எம். தௌபீக், கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஜீ. சுகுணன், அமைச்சின் கட்ட நிர்மான பிரிவின் பணிப்பாளர் ஸ்ரீரஜீபன் அடங்கிய குழு, வைத்தியசாலை அபிவிருத்திக்குழுவினர் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

இதனை தொடர்ந்து நிந்தவூர் ஆயுர்வேத தொற்றாநோய் ஆராய்ச்சி தேசிய வைத்தியசாலைக்கு விஜயம் செய்த சுகாதார அமைச்சின் கட்ட நிர்மான பிரிவின் பணிப்பாளர் ஸ்ரீ ரஜீபன் அடங்கிய குழுவினர் ஆயுர்வேத தொற்றாநோய் ஆராய்ச்சி தேசிய வைத்தியசாலை பணிப்பாளர் டாக்டர் கே.எல். நக்பரிடம்



நிர்மாணிக்கப்பட வேண்டிய வைத்தியசாலை கட்டிட விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடியதுடன் சுவதாரணி மருந்துபொதிகளையும் பெற்றுக் கொண்டார்.

மேலும் நிந்தவூர் சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத்திற்கு விஜயம் செய்த சுகாதார அமைச்சின் கட்ட நிர்மான குழுவினர் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் பிரோசா நக்பரிடமும் கட்டிட நிர்மாணங்கள் தொடர்பில் கலந்துரையாடினர்.

# சிவானந்தா தேசிய பாடசாலையினை டிஜிட்டல் பாடசாலையாக அபிவிருத்தி செய்யும் வேலைத்திட்டம் ஆரம்பம்!!



கல்லடி நிருபர்

மட்டக்களப்பு சிவானந்தா தேசிய பாடசாலையினை டிஜிட்டல் பாடசாலையாக அபிவிருத்தி செய்யும் முதற்கட்ட வேலைத்திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

உலக நவீனமயமாக்கலுக்குள் சென்றுகொண்டிருக்கும் இந்த காலகட்டத்தில் கல்வித்துறையும் நவீனமயமாக்கல் ஊடாக டிஜிட்டல் மயமாக்கப்படுவதன் ஊடாக மாணவர்களும் இலகுவாக கல்வி கற்கக்கூடிய வகையில் பாடசாலைகளை அபிவிருத்தி செய்ய வேண்டிய தேவைப்பாடுகள் இருந்து வருகின்றது. அந்த வகையில் சிவானந்தா தேசிய பாடசாலையினை டிஜிட்டல் மயமாக்கும் வேலைத்திட்டமானது மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷன் மேலாளர் சுவாமி தட்சயானந்தா ஜீ மஹராச் அவர்களது ஆசீர்வாதத்தோடு ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

சிவானந்தா தேசிய பாடசாலையின் அதிபர் நவரெட்ணம் சந்திரகுமார் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் மலர்மாலை அணிவித்து அதிதிகள் வரவேற்கப்பட்டதனைத் தொடர்ந்து, அதிதிகளின் உரை இடம்பெற்றதனைத் தொடர்ந்து இராமகிருஷ்ண மிஷன் மேலாளர் சுவாமி தட்சயானந்தா ஜீ மஹராச் அவர்களது முயற்சியினால் வழங்கப்பட்ட சுமாட் பனல் வோட் இதன்போது பாடசாலை நிருவாகத்திடம் உத்தியோகபூர்வமாக வழங்கிவைக்கப்ட்டது.

மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷன் சுவாமி நீலமானந்தா ஜீ மஹராச், பாடசாலையின் உப அதிபர்கள், பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக்குழு செயலாளர் ச.சந்திரகுமார், பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள் மற்றும் மாணவர்கள் என குறிப்பிட்டளவிலானோர் கலந்துகொண்டனர்.

# கந்தளாய் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகள் பெறல்



ஹஸ்பர் ஏ ஹலீம்

கிராமத்துடனான கலந்துரையாடல் கிராமிய பொருளாதாரத்தை கட்டியெழுப்பல் தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் 2022 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட முன்மொழிவு பெறல் வேலைத்திட்டத்தின் கீழ் கந்தளாய் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகள் பெறல் கந்தளாய் பிரதேச செயலகத்தில் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் ஒருங்கிணைப்பு குழு தலைவர் கபில நுவன் அத்துகோரல தலைமையில் நடைபெற்றது.

பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட 23 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளுக்கும் உரிய அபிவிருத்தித் திட்ட முன்மொழிவுகள் இதன்போது பிரதேச அரசியல் தலைமைகள் அரச அதிகாரிகள் மற்றும் பொதுமக்கள் மூலமாக பெறப்பட்டமை விஷேட அம்சமாகும்.

திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் சமன் தர்சன பாண்டிகோராள, கிழக்கு மாகாண முன்னாள் அமைச்சர் ஆரியவதி கலபதி , கந்தளாய் பிரதேச சபை தவிசாளர் சமன் ஏக்கநாயக்க, கந்தளாய் பிரதேச செயலாளர் உபேக்சா குமாரி, பிரதேச அரசியல் தலைமைகள், அரச அதிகாரிகள் உட்பட பொதுமக்களும் கலந்து கொண்டனர்.

நாள் தோறும்
சுபீட்சம் மின்னிதழை
பார்வையிட
www.supeedsam.com

SAYENTHIRAN KATHIR
Geschäftsführer
S TRAVEL
Flugtickets | Hotels | Reiseversicherungen
Luisenstr 21 8005 Zurich | info@stravel.ch www.stravel.ch
044 419 91 00 079 913 77 59

“கல்விக்கு கைகொடுப்போம்”
எல்லாவற்றையும் இழந்து நிற்கும் எமது சமுகத்தை
கல்வியால் மட்டுமே கட்டியெழுப்ப முடியும்
அறிவாலயம்
அறக்கட்டளை நம்பிக்கை நிதியம்
இலங்கை.
ஸ்தாபகர் அலையப்போடி நல்லரெத்தினம்
ARIVALAYAM FOUNDATION TRUST
தலைமைக்காரியாலயம்: பண்டாரியாவெளி, கொக்கட்டிச்சோலை
arivalayam@hotmail.fr +94 77 068 4555 | Sriram : +94 77 652 0206

கிழக்கிலங்கையின் காரைதீவில் வெளிநாட்டு
துரித பொதிகள் சேவையில் புதிய பரிணாமம்



வெளிநாட்டில் இருக்கும் உங்கள்
உறவுகள் நண்பர்களுக்கு பொதிகள்
மற்றும் ஆவணங்களை துரித
வேகத்தில் உரிய முகவரியில்
கொண்டு சேர்க்க
இன்றே நாடுங்கள்
TA parcel.lk
LOCAL & INTERNATIONAL COURIER SERVICE
TA ENTERPRICES & CO வின்
TA PARCEL.LK

| | |
|---|---|
| துரித வேகம். | London, Swiss, France, Canada 3 Days Only) Quick Service |
| உலகின் எப்பாகத்திற்கும் பொதிகள் அனுப்பும் வசதி. | All Countries |
| பொதிகள் முழு (100%) காப்புறுதி செய்யப்படுகின்றது. | 100% Insured |
| 365 நாட்கள் 24 மணி நேர வாடிக்கையாளர்கள் சேவை. | 365 Days 24 Hours Service |
| உரிய முகவரியில் கொண்டு சேர்க்கப்படும். | Door to Door Delivery |
| இணையத்தளம் மூலம் உங்கள் பொதிகள் எங்கு உள்ளது என கண்டறியும் வசதி. | Online Tracking System |
| சிறந்த பொதியாக்கம். | Quality Packing |

நீங்கள் பொதிகள் ஒப்படைக்கும் போதே Traking Number வழங்கப்படும்.

இவ்வாறான நம்பகதன்மைகளுடன்
உங்கள் உறவுகளின் எதிர்பார்ப்புகளை
கொண்டு சேர்க்கின்றோம்.

எங்கள் நிறுவனத்தின் ஊடாக பொதிகள்
அனுப்பும் ஒவ்வொரு வாடிக்கையாளர்களுக்கும்
பெறுமதியான பரிசில்கள் மற்றும்
அன்பளிப்புகள் காத்திருக்கின்றது.

அரச மற்றும் தனியார்
நிறுவனங்களுக்கு விசேட
விலைக்கழிவு.

வெளிநாடுகளில் இருந்து
அனுப்பப்படும் பொதிகளையும்
இங்கு பெற்றுக்கொள்ளலாம்.

TA PARCEL.LK | Main Street Karaithivu | taparcel.lk@gmail.com, +94774385151, +94752542651

உதயகுமார் கல்வி நிலையம்



முனைக்காடு மேற்கு,
கொக்கட்டிச்சோலை
தொடர்புகளுக்கு:
076-1549129
+966539028295
+966502126923
n.uthayakumar1981@gmail.com

SHELVA SWISS
YOUR FUTURE OUR VISION
041 790 64 63 079 514 64 28
வீட்டுக்கடன்
0.62%
தொடக்கம்
10% இல்
சொந்த வீடு கட்ட
அல்லது வாங்க
- இருக்கும் வீட்டை வைத்து இன்னொரு வீட்டை வாங்க...
- வீடு வாங்க, விற்க, கட்ட, திருத்த...
- வீடு வாங்குவதற்கான ஆயுட்காப்புறுதி
- Architect வேலைகள்

இலங்கையில் வீடுகள், காணிகள்,
விற்க, வாங்க, கட்ட, திருத்த
இலங்கைக்கு போக
வேண்டிய தேவை இல்லை.
SWISS இல் இருந்து
கொண்டே செய்யலாம்.
» கிறங்கன்காசே
» ஆயுட்காப்புறுதி
» பயணக்காப்புறுதி
» சட்டக் காப்புறுதி

Restaurant
GRÜNAU
ITALY · INDIAN · THAI · SRILANKA
Frühstuck / Mittagessen / Abendessen
Meier-Wiesen Str. 58
8064 Zürich
Montag - Sonntag
08:00 - 22:00



PIZZA NACH WAHL, TANDOORI, FISCH SPL
BBQ GRILL, BIRIYANI SPL, CURRY GERICHTE,
PARTYSERVICE.
Bestellung Number
044 260 2222
079 563 2222
www.restaurant-grunau.ch
info@restaurant-grunau.ch
Uber Eats
TWINT

# கலந்துரையாடலும் கௌரவிப்பும்





(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

சமூக பாதுகாப்பு சபையின் ஒய்வூதிய திட்ட அமுல்படுத்தலில் மூன்றாம் காலாண்டு வரையான அடைவு மட்ட மதிப்பீட்டுக்கான கலந்துரையாடலும், கடந்த ஆண்டு ஒய்வூதிய திட்ட நடைமுறைபடுத்தலில் மட்டக்களப்பு மாவட்டம் அடைந்து கொண்ட தேசிய அடைவு மட்டங்களை கௌரவிக்கின்ற நிகழ்வும் மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரன் தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலில் 2020 ஆம் ஆண்டு மாவட்டத்திற்கான இலக்கினை முழுமையான அளவில் பூர்த்தி செய்வதற்கான வழிமுறைகளை, புதிய சுற்றுநிருபத்திற்கு அமைய ஒய்வூதிய உத்தேசத்திட்டத்தின் செயல்பாடுகள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டதுடன் 2020 ஆம் ஆண்டு அகில இலங்கை ரீதியில் முதல் இடத்தினை பெற்றுக்கொண்ட மட்டக்களப்பு மாவட்டத்தின் 2020 ஆம் ஆண்டு தேசிய அடைவு மட்டத்தை அடைந்த பிரதேச செயலகங்களுக்கு சமூக பாதுகாப்பு சபையின் சான்றிதழ்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டதுடன் , 2020 ஆம் ஆண்டுக்கான ஊக்குவிப்பு கொடுப்பனவு கொடுப்பனவுகளை வழங்கப்பட்டன.

இலங்கை சமூக பாதுகாப்பு சபையின் மாவட்ட ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர் ஏ.எம்.அமீன் ஒருங்கிணைப்பில் நடைபெற்ற நிகழ்வில் இலங்கை சமூக பாதுகாப்பு சபையின் வடக்கு கிழக்கு இணைப்பாளர் பி.பிரதீபன், மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர்களான சுதர்சனி சிறீகாந்த், திருமதி.நவருப ரஞ்சனி முகுந்தன், திட்டமிடல் பணிப்பாளர் திருமதி.சசிகலா புண்ணியமூர்த்தி மற்றும் பிரதேச செயலாளர்கள் உள்ளிட்டோர் இதன்போது கலந்து கொண்டிருந்தனர்.

# பெரும்போகத்தில் 40 ஆயிரம் வீட்டுத்தோட்டங்களை மட்டக்களப்பில் உருவாக்க விதைப் போதிகள் கையளிப்பு

(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

பெரும்போகத்தில் 40 ஆயிரம் வீட்டுத் தோட்டங்களை மட்டக்களப்பு மாவட்டத்தில் உருவாக்கத் தேவையான விதைப் பொதிகள் கமநலசேவைத் திணைக்களத்திடம் கையளிக்கப்பட்டுள்ளது.

அரசின் சுபீட்சத்தின் நோக்கு கொள்கைப் பிரகடனத்திற்கமைவாக ஒவ்வொரு வீட்டுக்கும் ஒரு வீட்டுத் தோட்டம் எனும் தொனிப்பொருளின்கீழ் விவசாய அமைச்சினால் நாட்டில் 1.2 மில்லியன் வீட்டுத்தோட்டங்களை உருவாக்கும் தேசிய வேலைத்திட்டம் இடம்பெற்றுவருகின்றது.

இதற்கமைவாக மட்டக்களப்பு மாவட்டத்தில் 40 ஆயிரம் வீட்டுத் தோட்டங்களை கிராமப்புரம் மற்றும் நகர் புரங்களிலும் அமைப்பதற்கான ஏற்பாடுகளை மாவட்ட விவசாயப்பிரிவு, கமநல சேவைகள் திணைக்களம் மற்றும் விவசாய விரிவாக்கல் திணைக்களம் ஆகியன இணைந்து செயற்படுத்தி வருகின்றது.



இதில் முதற்கட்டமாக மாவட்ட அரசாங்க அதிபர் கே. கருணாகரனின் வழிகாட்டலில் 25 ஆயிரம் விதைப் பொதிகளை தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு வழங்குவதற்காக கமநல சேவைகள் திணைக்களத்திடம் கையளிக்கும் நிகழ்வு இன்று மாவட்ட செயலகத்தில் இடம் பெற்றது. இதன்போது இவ்விதைப் பொதிகளை மாவட்ட விவசாய பணிப்பாளர் எம்.எஸ்.ஏ. ஹலீஸ், கமநல சேவைகள் திணைக்கள பிரதி ஆணையாளர் கே. ஜெகநாதிடம் கையளித்தார்.

மட்டக்களப்பு கரடியனாறில் அமைந்துள்ள விதை உற்பத்தி ஆராய்ச்சி நிலையத்திலிருந்து பெறப்பட்ட இவ்விதைப் பொதிகள் இப்பிரதேசத்தில் பயிற்செய்கைக்கு மிகவும் பொருத்தமானது என மாவட்ட விவசாயப் பணிப்பாளர் கலீஸ் தெரிவித்தார்.

எதிர்வரும் நவம்பர் மாதம் முதலாம் திகதி தேசிய ரீதியாக இவ்வேலைத் திட்டம் விவசாய அமைச்சினால் கண்டி மாவட்டத்தில் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது. இதேவேளை நவம்மபர் 1ம் திகதி முதல் %ஆந் திகதி வரை சௌபாக்கியா வீட்டுத்தோட்ட பயிர்ச்செய்கை வாரமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதுடன் இக்காலப்பகுதியில் இவ்விதைப் பொதிகள் குறித்த கமநல சேவைப் பிரிவுகளில் தெரிவு செய்யப்பட்ட பயணாளிகளுக்கு விநியோகிக்கப்பட்டு பயிர் செய்கையும் இடம்பெறவுள்ளது.

இப்பயிர் செய்கைக்கான தொழினுட்ப ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் விவசாய விரிவாக்கல் பிரிவு வழங்கவுள்ளது. இவ்வீட்டுத்தோட்ட செயற்றிட்டத்தினூடாக பொதுமக்களின் நுகர்வுத் தொகையில் ஒருபகுதியை நிவர்த்தியாக்குவதுடன் பொருளாதார வளர்ச்சியையும் உயர்த்த முடியும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# தற்கோலைகளை கட்டுப்படுத்த அரசாங்கம் பொறிமுறையை உருவாக்க வேண்டும்

(அ.அச்சுதன்)

அதிகரித்துவரும் இளம் தற்கொலைகளை கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கம் சரியான பொறிமுறையை உருவாக்க வேண்டும் என மூதூர் பிரதேச சபை உப தவிசாளர் சி.துரைநாயகம் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நாட்டில் அண்மைக்காலமாக தற்கொலை முயற்சிகளில் ஈடுபடுகின்றவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது. குறிப்பாக தொலைபேசிக்கு அடிமையாகி மாணவர்களும், சிறு சிறு குடும்ப பிரச்சினை காரணமாக மன அழுத்தத்திற்கு உள்ளாகி இளைஞர்கள் யுவதிகளும் தற்கொலை செய்து வருகின்றார்கள். இவர்களை பாதுகாக்கும் முகமாக அரசாங்கம் சரியான பொறிமுறையை உருவாக்கி அதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும்.



உலக வங்கியின் அபிவிருத்தி குறிகாட்டிகளின்படி இலங்கையின் தற்கொலை இறப்பு ஒரு இலட்சம் பேருக்கு 14 பேர் என்ற விகிதத்தில் காணப்படுகின்றது. அத்துடன் 50 வீதத்திற்கும் அதிகமானவர்கள் மனநல கோளாறின் காரணமாக தற்கொலை செய்து கொள்வதாகவும் இவர்களில் %3 வீதத்திற்கும் அதிகமானவர்கள் பெண்கள் என்பதும் ஆய்வுகள் தெரிவிக்கின்றன. அத்துடன் யுத்தகாலத்தில் இறந்தவர்களைவிட தற்கொலையின் காரணமாக சம்பவிக்கின்ற இறப்புக்கள் அதிகரித்து வருவதாகவும் ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

குறிப்பாக மன அழுத்தத்திற்கு உள்ளானவர்கள் தொலைபேசி மூலமாக தங்களுக்கான ஆலோசனைகளை பெற்றுக் கொள்வதற்கும், மன அழுத்தத்தில் இருந்து விடுபடுவதற்கான துரித அழைப்பு சேவைகளை நவீன முறையில் உருவாக்குவதோடு, இருக்கின்ற சேவைகளை திறம்பட இயக்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வது மட்டுமல்லாது இந்த சேவையினை மக்கள் மத்தியில் கொண்டு சேர்ப்பதற்குரிய நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும். அத்துடன் பாடசாலை ரீதியாக மனவள நிகழ்ச்சித் திட்டங்களை முன்னெடுத்து உளரீதியாக வலுவான மாணவர் சமுதாயத்தை உருவாக்க அரசு நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# ஆலோசனை கூட்டம்



(வி.சுகிர்தகுமார்)

ஆலையடிவேம்பு பிரதேச செயலகத்திற்குட்பட்ட கண்ணகிகிராமத்தில் இராணுவத்தின் உதவியுடன் பாரிய அளவில் சேதனப்பசளை தயாரிப்பது தொடர்பிலான ஆலோசனை கூட்டம் பிரதேச சபை தவிசாளர் த.கிரோஜாதரன் தலைமையில் கண்ணகி வித்தியாலயத்தில் இன்று நடைபெற்றது.

இக்கூட்டத்தில் பிரதேச செயலாளர் வி.பபாகரன் மற்றும் உள்ளூராட்சி மன்ற ஆணையாளர் கமல் நெத்மினி இராணுவ உயர் அதிகாரிகள் பிரதேச சபை செயலாளர் உறுப்பினர்கள் துறைசார் அதிகாரிகள் சமூக அமைப்பின் பிரதிநிதிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது பல்வேறு கருத்துக்கள் தெரிவிக்கப்பட்ட நிலையில் சேதனப்பசளை தயாரிக்கும் இடமாக கடந்த காலத்தில் திண்மக்கழிவு முகாமைத்துவ நிலையமாக இயங்கிய வந்து கைவிடப்பட்ட பிரதேசத்தை பயன்படுத்துவது என தீர்மானிக்கப்பட்டது.

இதற்காக பொதுமக்களின் கருத்துக்களை அறிந்து கொள்வது எனவும் முடிவு காணப்பட்டது. இந்நிலையில் முறையற்ற பராமரிப்பு காரணமாக மக்களின் எதிர்ப்பின் மத்தியில் கைவிடப்பட்ட குறித்த இடத்தை உரிய முறையின் கீழ் பயன்படுத்துவதன் நன்மைகள் பற்றி பிரதேச செயலாளர் எடுத்துரைத்தார். அத்தோடு இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் எழும் பிரச்சினைகள் அதற்கான தீர்வுகள் தொடர்பாகவும் விளக்கினார்.

இதனால் பிரதேச சபை மாதாந்தம் இழந்து வரும் பெரும் தொகைப்பணத்தை ஏனைய அபிவிருத்தி திட்டங்களுக்கு பயன்படுத்த முடியும் எனவும் கூறப்பட்டது.

மேலும் பிரதேச சபையால் கழிவுப்பொருட்களை சேகரித்து குறித்த இடத்திற்கு எடுத்து செல்லும் பணி மாத்திரமே மேற்கொள்ளப்படும் எனவும் இதன் பின்னரான அனைத்து செயற்பாடுகளையும் இராணுவத்தினரே பொறுப்பேற்று செயற்படுத்துவர் எனவும் விளக்கமளிக்கப்பட்டது. இதனால் சூழலுக்கோ அல்லது அங்கு வாழும் மக்களுக்கோ எதுவித பாதிப்புக்களும் ஏற்படாதவாறு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் உறுதி வழங்கப்பட்டது. இதனை பிரதேச செயலகம் பிரதேச சபை இராணுவம் ஆகிய மூன்று தரப்பினரும் இணைந்து மேற்கொள்வர் என்றும் கூறப்பட்டது.

மேலும் இங்கு தயாரிக்கப்படும் சேதனப்பசளை நமது பிரதேச விவசாயிகளுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் குறித்த திட்டத்தின் ஊடாக உருவாகும் வேலைவாய்ப்புக்கள் யாவும் கண்ணகிகிராம மக்களுகே முன்னுரிமை அளித்து வழங்கப்படும் என்றும் உறுதிமொழி வழங்கப்பட்டது.

இதேநேரம் பல அதிகாரிகளும் குறித்த திட்டம் தொடர்பில் விளக்கினர். இந்நிலையில் பொதுமக்கள் சிலரால் முன்வைக்கப்பட்ட கேள்விக்கும் கோரிக்கைக்கும் அமைய இன்னுமொரு தினத்தில் மக்களை அழைத்து விளக்கமளிக்கப்படும் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

# கைத்தறி ஆடை காட்சிப்படுத்தலும் விற்பனையும்



(வி.சுகிர்தகுமார்)

தீபாவளியினை முன்னிட்டு அம்பாரை மாவட்ட தொழில்துறை திணைக்களம் கைத்தறி ஆடைகளை அரச அலுவலகங்களில் காட்சிப்படுத்தி வருவதுடன் விற்பனை செய்தும் வருகின்றது.

இதற்கமைவாக இன்று ஆலையடிவேம்பு பிரதேச செயலக கலாசார மண்டபத்தில் தொழில்துறை திணைக்கள உத்தியோகத்தர்கள் நடமாடும் சேவை மூலம் கைத்தறி ஆடைகளை காட்சிப்படுத்தியதுடன் விற்பனையிலும் ஈடுபட்டனர்.

விசேடமாக அரச உத்தியோகத்தர்களின் நலன் கருதி மிகக் குறைந்த விலையில் அவர்களது மாதாந்த வேதனத்திலிருந்து அறவீடு செய்யும் வகையிலும் ஆடைகளை விற்பனை செய்தனர்.

அரசாங்கம் கைத்தறி ஆடைகளின் உற்பத்தி மற்றும் விற்பனையை அதிகரிக்கச் செய்யும் நோக்கில் அரச உத்தியோகத்தர்களும் கைத்தறி ஆடைகளை குறித்த ஒரு நாளில் அணிந்து அலுவலகங்களுக்கு செல்ல வேண்டும் எனும் சுற்றிக்கையினை கடந்த காலங்களில் வெளியிட்ட நிலையில் குறித்த நடமாடும் சேவை இடம்பெற்றது.

திணைக்களத்தின் அபிவிருத்தி உத்தியோகத்தர் ரி.கணேந்திரன் மற்றும் விற்பனை பொறுப்பாளர் எம்.எல்.எம்.சாதிக் உதவி விற்பனை பொறுப்பாளர் யு.சுகன்யா உதவியாளர் ரி.தேவேந்திரன் உள்ளிட்டவர்கள் விற்பனை நடவடிக்கையினை முன்னெடுத்ததுடன் அதிகளவான உத்தியோகத்தர்கள் ஆடை கொள்வனவில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது.

# தொடர் விசாரணயில் மீண்டும் கேரளா கஞ்சா கைப்பற்றல்



(வாஸ் கூஞ்ஞ)

மன்னார் நீதவான் நீதிமன்றின் அனுமதியுடன் கேரளா கஞ்சாவுடன் கைது செய்ய்பட்ட சந்தேக நபர் ஒருவரை தடுத்து வைத்து விசாரனையை மேற்கொண்ட பொலிசார் மேலும் கஞ்சாவை கைப்பற்றியுள்ளதாக பொலிசார் தெரிவித்துள்ளனர்.

மன்னார் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தாழ்வுபாட்டுப் பகுதியில் பகுதியில் மன்னார் பொலிஸ் விசேட புலனாய்வு பிரிவுக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் பிரகாரம் கேரளா கஞ்சா 10கிலோ 370 கிராம் தம்வசம் வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் மன்னார் கீரி பகுதியைச் சேர்ந்த சந்தேகநபர் ஒருவர் (வயது 18) பொலிஸாரினால் கடந்த 23.10.2021 கைது செய்யபட்டிருந்தார். இதனைத் தொடர்ந்து மன்னார் நீதவான் நீதிமன்ற அனுமதியுடன் இவ் சந்தேக நபரை பொலிசார் தடுத்து வைத்து தொடர்விசாரனையில் ஈடுபட்டனர்.

இதன்போது இவ் சந்தேக நபரிடமிருந்து பெறப்பட்ட தகவலைத் தொடர்ந்து மேலும் 2 கிலோ 60 கிராம் கேரளா கஞ்சா செவ்வாய் கிழமை (26) கைப்பற்றப்பட்டு இவற்றை மன்னார் மாவட்ட நீதவான் நீதிமன்றில் கையளிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என பொலிசார் தெரிவித்தனர்.

மன்னார் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பண்டுள்ள வீரசிங்கவின் பணிப்பில் இ உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் விதானகேஇ மன்னார் பொலிஸ் நிலைய தற்போதைய வேலை பார்க்கும் பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் மஞ்சுளஇ மன்னார் பொலிஸ் நிலைய ஊழல் ஒழிப்பு பிரிவு பொறுப்பதிகாரி ள.டி.திலங்கவின் தலைமையிலான பொலிஸ் குழுவினர் மேற்படி கேரள கஞ்சாவினை கைப்பற்றியதும் குறிப்பிடத்தக்கது.

# கந்தளாய் பிரதேசத்தில் கோள்ளை மற்றும் கசிப்பு உற்பத்தி போன்ற குற்றச் செயல்களுடன் தோடர்புடைய சந்தேக நபர் விளக்கமறியலில்

( எப்.முபாரக்)

திருகோணமலை கந்தளாய் பிரதேசத்தில் கொள்ளை மற்றும் கசிப்பு உற்பத்தி போன்ற குற்றச் செயல்களுடன் தொடர்புடைய சந்தேக நபர் ஒருவரை அடுத்த மாதம் 5 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கந்தளாய் நீதிமன்ற நீதிவான் விசானி தேனவது உத்தரவிட்டார்.

சேனாநாயக்க மாவத்தை, கந்தளாய் பகுதியைச் 49 வயதுடைய ஒருவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

குறித்த சந்தேக கந்தளாய், முள்ளிப் பொத்தானை போன்ற பிரதேசங்களில் கடைகளை உடைத்து கொள்ளையிட்டமை மற்றும் கந்தளாய் பிரதேசத்தில் கசிப்பு உற்பத்தி செய்தமை போன்ற குற்றச்செயல்களுடன் ஈடுபட்டுள்ளதாக தெரிவித்து சந்தேக நபரை பொலிஸார் கைது செய்து கந்தளாய் நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்திய போதே விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

# MATHE BILDUNGSZENTRUM

# கணித கற்கைநெறி மையம்

MBZ

**கல்வியே துணை**

பள்ளித் தலைமனைத்தும்
பேரெடுக்கும் பிள்ளைகள்.

அள்ளிப் பெற்றுவரும்
நிறைவான புள்ளிகள்!

உள்ளதை சொல்வதெனில்
எங்ஙனம் சாத்தியம்..

எள்ளளவும் பொய்யில்லை
எட்டிவந்து பாரும்!!

- MATHE BILDUNGSZENTRUM

S.MAHENDIRAN

076 431 83 79

mbz.mahe@gmail.com

**Mathe மகேந்திரா**-வின் தெளிவான
கற்பித்தலில் திருப்தியுறும் பெற்றோர்கள்.

MATHE மட்டுமல்ல

**Deutsch, Französisch, Englisch, Gymi Prüfung**
**BMS, HMS, FMS, Gymi Probe**

அத்தனைக்கும் கீழ்காணும் இடங்களில்

**Oerlikon, Uster, Schaffhausen**